# யாழ் நாதம்

இதழ் 7

2001



யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி உமாராணி குமாரசுவாமி

Prof. (Mrs). Umarany Coomaraswamy
Text: Page 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. அம்பலவாணர்.



# யாழ் நாதம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கக்
கொழும்புக் கிளையின்
வெளியீடு

இதழ் 7 2001

1. உள் அட்டை ........

2. தாயும் சேயும்

3. தலைவர் செய்தி

4. Professor (Mrs.) Umarany Coomaraswamy

10. கர்வம்

13. பெற்றோர்களும் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலமும்

16. தமிழ்த்தின போட்டி ௨00l வெற்றியீட்டியோர் விபரம்

18. Reflections

19. யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக்கிளையின் ஏழாம் ஆண்டு (௨000) அறிக்கை

25. ஸ்ரீ சைலம்

29. ஒரு பழைய பேனாவின் சுயசரிதை

30. சேது யாத்திரை

41. ஒன்றுகூடல் நிகழ்வில் . . . . .

43. மயூராபதி அம்மன்

44. வெப் தளத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் சேயும்

சேது யாத்திரை கட்டுரையில் குறிப்பிட்டுள்ள அக்கினி தீர்த்தம் என்ற கடலின் படம் அட்டைப்படத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் திருமதி உமாராணி குமாரசுவாமியின் படம் உள் அட்டையில் காட்சியளிக்கின்றது. இவர் எங்கள் எல்லோரதும் உள்ளத்தைக் கவர்ந்த பெண்மணியாவார்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்"

எமது கல்லூரி அன்னைக்கும் உமாராணிக்கும் உள்ள தொடர்பு மேற் குறிப்பிட்டவற்றிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியை **www.jhlc.lk** என்ற முகவரியுடன் வெப்தளத்தில் வருவதற்கு உதவிய திரு உ. ஜெயதீபனுக்கும் அவரது நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

வழமை போல இந்த மலருக்கு வெளியுறை செய்து சீரக்கிய யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் திரு பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

61/2, Abdul Gaffoor Mawatha
Colombo 3

திருமதி சிவகாமி அம்பலவாணர்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர் செய்தி

வாசக நேயர்களே,

யாழ் நாதம் இவ்வாண்டிலும் இசை எழுப்புகிறது. நோக்கம், செயற்பாடு இவற்றில் மேலும் சீர்பெற யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளை தொடர்ந்து பாடுபடுகிறது. யாழ் நாதம் இதழிற்கு விடயதானம் தருவதற்கு அங்கத்தவர்கள் போட்டி போட்டுக் கொண்டு முன் வருவதில்லை என்பதையிட்டு சிறிது ஏமாற்றம், ஆயினும் இதழாசிரியர் அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும் என்று அங்கத்தவர்களை எப்படியோ எழுதவைத்து இந்த இதழை வருடா வருடம் வெளியிட்டு வருகிறார். கடுகு சிறிது காரம் பெரிது என்பது போன்று இதன் நாதம் இனிது ஒலிக்கிறது. அங்கத்தவர்களின் இலக்கிய ஆற்றலுக்கு தளம் அமைப்பதோடு சங்க நடவடிக்கைகளின் ஆவணப் பதிவாகவும் அது சிறப்புப் பெறுவது குறிப்பிடத் தக்கது.

வெப் தளத்திலும் விபரங்கள் வெளி வருகின்றன. இம் முயற்சி தொடர வேண்டும்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்

தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PROFESSOR (MRS.) UMARANY COOMARASWAMY

We are proud to say that Professor (Mrs.) Umarany Coomaraswamy, fondly known as Uma to her friends, is an old girl of our Alma Mater, Jaffna Hindu Ladies College.

She is the current Vice Chancellor of the Open University of Sri Lanka. She is the first lady in the world who had obtained the Post of Vice Chancellor of an Open University. She is also the second lady in Sri Lanka to hold the Post of Vice Chancellor of a University.

She was born on 27th March 1941. She obtained B.Sc. Special (Ceylon) Honours Degree in 1965 and Ph.D. (Lond.) (Plant Virology) Degree in 1970. She is also a fellow of the Institute of Biology (Sri Lanka). She was a Commonwealth Scholar to the United Kingdom for her Ph.D. from 1967 – 1970 and a Fullbright Fellow to the University California (Riverside) in 1979.

She underwent a Certificate course in Physiological Plant Pathology, a UNESCO sponsored two-month course at University of Madras in 1972. In 1978 she underwent a Certificate course in Animal viruses and tissue culture, a UNESCO sponsored three-week course at India Institute of Science, Bangalore. She also got her Post-doctoral research training in Mycoplasmology at University of California, Riverside in 1979.

She served in many capacities at the Open University of Sri Lanka before she assumed the post of Vice Chancellor in December 2000.

She was the Dean/Faculty of Natural Sciences. As a Dean she was responsible for development of curriculum, conduct of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

teaching and examinations, research and general student activities of the faculty. During this tenure she also held the post of Acting Vice Chancellor on various occasions.

She joined the Open University in 1991 and held the position of Professor of Botany from May 1991 to 1993. During this time she was involved with teaching of courses such as Microbiology and Plant Diversity and took an active part in steering the restructuring of the B.Sc. Degree Program with a broad based curriculum. Restructured B.Sc. Program was launched in 1995. She functioned as the Head/Botany for a period of 6 years.

As a Senior Professor in Botany she was also involved in Instructional material development for the distance learners including videotapes. She also chaired the University Course Development Committee.

Before joining the Open University of Sri Lanka she served the Eastern University. She served as Dean/Faculty of Science from July 1986 to 1991.

As the University was in its formative stages she was directly responsible for drafting much of the By-laws, Rules & Regulations, Handbooks etc. for the Faculty of Science and for the University. She was also an active contributor in working out a link program between the Faculty of Science of Eastern University of Sri Lanka and that of the University of Sussex.

During this period she also served as Acting Vice-Chancellor on several occasions.

She held the post Head/Department of Botany from the day she assumed duties in 1981. In this capacity she was responsible for the development and administration of the Department and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for the direction of teaching and examination activities and for the overall supervision of research programs conducted by the departmental staff.

She was also the Senior Student Counsellor for six years from 1981 - 86. In this capacity she was directly responsible to the Vice-Chancellor for coordinating all student-counselling services. As a Student Counsellor she was responsible for providing assistance and guidance to the students in academic, social and personal problems.

Her beginnings were from the University of Colombo where she graduated in 1965 with a Special Degree in Botany. Faculty Member at University of Colombo was her first job. She served in University of Colombo until 1981 in the capacities of temporary Assistant Lecturer, Probationary Assistant Lecturer, Lecturer and Senior Lecturer in the Department of Botany. She directed all teaching and research activities in the field of Plant Pathology, Microbiology and Plant Virology.

She was responsible for the development of the Syllabus and the conduct of M.Sc. Plant Pathology Course in the Department of Botany.

Besides being a permanent staff member at the different Universities in University System she also served as Visiting Lecturer in Microbiology/Plant Pathology/Virology at the following Universities:
University of Colombo,
University of Peradeniya,
Sri Jayawardhanepura University,
University of Kelaniya,
University of Jaffna and
Post-Graduate Institute of Agriculture

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

She has to her credit merit awards.

"Long service Award" for 30 years meritorious service in the University System of Sri Lanka – Awarded by the Open University of Sri Lanka.

"Woman of Achievement – Science and Technology" 2000 – Awarded by the Zonta Club, Sri Lanka Branch; July 2000.

"Woman of the Year – 2000" – Awarded by the American Biographical Institute: August 2000.

She had attended many conferences/visits abroad.

Her contribution to organisation of major conferences/workshops in Sri Lanka was enormous.

## CURRENT PROFESSIONAL POSITIONS/ATTACHMENTS

*Chairperson, Council of The Open University of Sri Lanka
*Member, Board of Management, National Science Foundation, Colombo
*Member, Audit and Management Committee – National Science Foundation
*Member, Committee of Vice Chancellors and Directors
*Member, Council of the Sri Lanka Association for the Advancement of Science
*Member, Project Technical Advisory Committee, Science and Technology Personnel Development Project
*Member, University Grants Commission Standing Committee on External Degrees and Distance Education
*Member, Panel of Curriculum and examination, A/L Biology
*Member, Western Province Advisory Council on Popularisation of Science and Technology

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Chairperson, Science Education Committee of the Sri Lanka Association for the Advancement of Science (SLAAS)
*Member, International Publications Advisory Board of the Commonwealth of Learning, Canada

## PEVIOUS PROFESSIONAL POSITIONS/ATTACHMENTS

She had held several positions in Sri Lanka Association for the Advancement of Science (SLAAS), Natural Resources Energy and Science Authority, UNESCO, UGC/Other Universities, Central Environmental Authority, Institute of Biology, Academic Council of the Institute of Fundamental Studies and Sri Lanka Red Cross Society

She was also the General President, Sri Lanka Association for the Advancement of Science for 1999

## CONSULTANCY ASSIGNMENTS

She has been involved in more than 10 Consultancy Assignments.

## CURRENT RESEARCH

Preparation of Hand Books to the identification of fungi of Sri Lanka sponsored by UNESCO/MAB and published by Natural Resources Energy and Science Authority of Sri Lanka (NARESA), 1981 to date. In preparation – Hand book on the myxomycetes of Sri Lanka. 5 books in this series have already been published by NARESA.

Research in Distance Education monitoring and researching into improving of the effectiveness learning methodology

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Directing Post Graduate research in Soil Biology, in multimedia courseware for Distant Learners.

## PUBLICATIONS AND COMMUNICATIONS

She has over 25 publications and communications to her credit.

## INTEREST OTHER THAN UNIVERSITY RELATED

Popularisation of Science and dissemination of Scientific knowledge to lay public and school students across the island – Under the popularisation of Science through Sri Lanka Association for the Advancement of Science.

Enhancing the capability of A/L school teachers and students island-wide on handling science projects. This is an important part of the new educational reforms. This is effected through the Science Education Project of the Sri Lanka Association for the Advancement of Science.

Training of Women in Higher Education and Management in Universities: She was a participant at a trainers training programs in 1999 organized by the University Grants Commission and sponsored by the Association of Commonwealth Universities. Seminars are held at universities to enhance the capabilities of women.

Involved with general scientific issues for national development: identifying issues, directing and monitoring research by being associated with National Science Foundation, Sri Lanka Association for the Advancement of Science and National Science and Technology Commission.

JHLC-OGA-COLOMBO

Photograph: Front inner cover

30.06.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



-கவிதை நாடகம்

(முல்லைக் கொடி, தன்னை நோக்கி வரும் மயிலை வரவேற்கிறது)

முல்லை - வரவேண்டும் வரவேண்டும் வண்ணமயில்
நங்காய், சற்றே அமர்க.
சலித்தாய் வழி நடையால்,

மயில் - முல்லைக் கொடிப் பெண்ணே! முத்த நகையழகீ
கல்லைக் கனிய வைக்கும் கற்கண்டு
தீஞ்சொல்லால் அன்பைச் சொரிந்தாய் நீ
ஆயிரங்கால் ஊன்றிடுக.

(மயில் கீழே உட்காரப் போகிறது)

முல்லை - புழுதியிலே உட்காரப் போகிறாய் - மேனி
பழுதுபட்டுப் போகாதோ! பாவாய் இதோ இந்த
தங்கத் தேர் தன்னில் அமர்ந்திடுவாய்.

மயில் - உன்னுடைய தோழியெனக் குபகாரம் வேறேயா
கன்னி வயது முதல் காலமெலாம் மண்தரையில்
நின்னருகில் தானே நிமிர்ந்து விளையாடினேன்
தங்கத் தேர் மீது நான் தங்குதலும் கூடுமோ?

முல்லை - உன்னிஷ்டம் மாமயிலே! உட்கார் வெறுந்தரையில்.

மயில் - வெற்றுத் தரைதான் விளைசுகத்தின் ஆதியடி
முற்றத் துறந்தவரும் மூவுலகை யாள்பவரும்
தோன்றி மறைவதிந்த தூயமண்ணில் அல்லவோ?

முல்லை - உலக விவகாரங்கள் எப்படித்தாய் உள்ளன
நீ எங்கெங்கு சென்றாய்
அங்கங்கு கண்ட அதிசயங்கள் என்னென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில் - காலும் சிறகும் இருக்கின்ற காரணத்தினால்
பூலோகம் சுற்ற முடியுமோ?
காகம் கிளிபோல் ககன வழி மீதினிலே
தேகம் பெருத்த என்னால் தீங்கின்றிச்
செல்லல் இயலுமோ - மேலும்
அயலான் ஒரு மனிதன் அன்றொருநாள்
கார்மேகக் கூட்டம் கடுகியே வானத்தில்
போர்க்கோலம் பூண்டு பொழியும் மழையினிலே
உள்ளங் குளிர் உவகை மிகுந்திட
தோகை விரித்து நான் ஆடுகையில்
மேனி நடுங்குதென்று எண்ணிவிட்டான்.
பொன்னாடை தன்னை குளிருக்காக
என் மீது போர்த்திவிட்டுச் சென்றான்.
பேகன் என்பது அவன் பெயரெனத் தெரிந்து
கொண்டேன்.

அன்று முதல் இன்று வரை அழகிய
பொன்னாடைதனை நின்று சுமந்து
நெளிந்துடலம் குன்றிடவே
கஷ்டப்படும் என்னைப் பார்த்தாயோ!

முல்லை - பொன்மயிலே! துன்பம் பொறுத்திடுக
என்னைப்போல் நீயும் இதயம் நலிந்துவிட
மானிடனால் இந்த விதம் மாதுயரில் மூழ்கினையே
மாலைப் பொழுது மயங்குமோர் நாளதனில்
தங்கத்தேர் மீதேறி தையல் புடைசூழ
பாரியெனும் வள்ளல் இப் பாதையிலே வந்தான்.
தேர் நிறுத்தி என்னருகில் வந்தான்
பற்றி வளர்வதற்கு கொம்பின்றி பாவை நான்
தத்தளித்துத் தள்ளாடி நிற்பதாய் நினைத்து
தங்கத்தேர் தன்னை அருகில் நிறுத்தி
என் அங்கத்தைப் பிடித்து தேரை அணைக்க
வைத்தான்

இந்த ரதம் தான் சொந்தரதம் என்றனக்கு
காலமெல்லாம் இந்தக் கனகத்தேர் மேல் படர்ந்து
சீலம் இழந்து சிரிப்பாய் சிரிக்கின்றேன்.

(இந்தச் சமயத்தில் பொன்னாடை கேலிச் சிரிப்பு சிரிக்கின்றது)

பொன்னாடை - பேசுங்கள் பேசுங்கள் நன்றாகப் பேசுங்கள்
நாக்கில் நரம்பின்றி ஊக்கமாய் பேசுங்கள்
வாய்க்கு வந்த வார்த்தை யெல்லாம்
வாரி வழங்குங்கள் - பொன்மயிலே
பேகனது மாண்புணரும் பெற்றி உனக்கேது
வீணேயுளறாதே வெற்றுரையை விட்டு விடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் - உண்மைதான் உண்மைதான்
ஒடிந்து விழுங் கொடியை கண்ட
மன்னன் பாரி பொங்கும் கருணையால்
பொற்தேராம் எந்தனை பக்கத்திருத்தி
கால் நடையாய்ப் போனாரே
நல்லதுக்குக் காலமில்லை
அன்பின் திறமறிவார் ஆயிரத்தில் ஒருவர் தானே!

முல்லை - தங்கத் தேராம் உம்மைத் தையல்
என்னருகில் நிற்க வைத்த காரணத்தால்
நீண்டு வளர்ந்தே னோ?
தேராம் நீர் இன்றேல் தெருவில்
கிடந்தமிழ்ந்து பாழ்பட்டிருப்பேனோ?
என்னைப் படைத்த கடவுள்
யான் வளரக் கொம்போ, மரமோ
கொடுக்காமல் போவானோ
பெற்ற புதல்வியரைப் பேண முடியாது
அப்படியே மாண்டு விட்ட
பாரி வள்ளல் வீரம் பலவும் தெரிந்ததன்றோ.

(அப்போது தென்றல் அங்கு வருகிறது)

தென்றல் - நீல மயிலே! நெடுங்கொடியாம் முல்லையே!
சாலவே நீவிர் இருவரும் சாற்றியதை
எட்ட இருந்து இருகாதால் கேட்டேன்
எல்லையற்ற இவ்வுலகம் எங்கும் நிறைந்திருக்கும் நான்
எட்டுத் திசையும் எதிரும் புகழ் மணத்தால்
கட்டுக் கடங்காத காவலராம் வள்ளல் தமை
ஏசுவார் உங்களைப் போல் எங்கும் பார்த்ததில்லை.
தேசமெங்கும் திரிந்துழந்து கண்டீரேல்
உண்மை விளங்கும் உறுதி புலப்படும்
வீண் கர்வம் கொண்டீர் விளைந்த பயன் யாதோ?
அகங்காரப் பாதை அழிவையே நோக்கிடுங்காண்
தானே வலிய வந்து தண்ணருளால் இவ்வுலகில்
எவ்வுதவி செய்தாலும் இவ்வாறவ மதிப்பு
பெற்றிடுதல் தானே பெரிய உண்மை
இன்று முதலேனும் இழிவு தரும் கர்வத்தை
கொன்று புதைத்திடுங்கள்
வீணாகக் கால விரயம் செய்யாதீர்.
முல்லையே! பொன்மயிலே!

எழுதியவர்:- செல்வி - சற்சொரூபவதி நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமுதாயத்தில் இன்று பெற்றோரும் பிள்ளைகளும் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இக் கஷ்டங்களுக்கு காரணம் யாது என நாம் சிந்திக்கும் பொழுது பல உண்மைகளை நாம் அறிய முடிகின்றது. அதாவது பெற்றோர் பிள்ளைகளைத் தவறாக வழி நடத்துவதினாலும் பிள்ளைகள் அப் பொறிகளில் வீழ்ந்து தமது சுய ஆற்றலை வெளிக் கொணர முடியாது தத்தளிப்பதையும், திசைமாறிச் சென்று தோல்விகளைத் தழுவியதையும் எனது 35 வருடகால ஆசிரிய சேவையின் போது கண்டு மிகவும் மனம் வேதனைப் பட்டுள்ளேன்.

இதைப் பற்றிய ஆய்வுகளையும் நான் உயர் தர மாணவர், பெற்றோருடன் கலந்துரையாடுவதன் மூலம் நடத்தியுள்ளேன். இத்தகைய சந்தர்ப்பங்களில் நான் பல உண்மைகளை இனம் காணக் கூடியதாக இருந்தது. முதலாவதாக அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆற்றல்களை, திறன்களை அவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் பெறத் தவறிவிடுகின்றார்கள். தங்கள் ஆசைகள், அபிலாசைகளுக்கு முன் உரிமை வழங்கி அதை எவ்வாறாகினும் அடைய முற்படுகின்றார்கள். இதனால் இளம் பிராயத்தில் இருந்தே தவறாக வழிநடத்தப் படுகின்றார்கள். குழந்தைகள் பிறக்கும் பொழுதே சில திறன்களைத் தம்மகத்தே கொண்டுள்ளார்கள். அத்திறன்களுக்கு ஏற்ப அவர்கள் சிறந்த முறையில் வழிநடத்தப்பட்டால் அவரவர் திறன்களுக்கு ஏற்ப ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற வாய்ப்புக்கள் உண்டு.

இன்றைய சமுதாயத்தில் இதைப் பற்றிய விளக்கங்களை பெற்றோர்களிடம் அவர்கள் விளங்கி ஏற்றுக் கொள்ளும் வகையில் தெளிவாக அவர்களுக்கு எடுத்து உரைக்க வேண்டிய கால கட்டம் நெருங்கியுள்ளது. இதனை யார் செய்யலாம்? இதனை உயர்தர வகுப்பில் கற்பித்தலில் ஈடுபட்ட ஆசிரியர்கள், அதிபர்கள், பாதிக்கப் பட்ட மாணவ சமுதாயத்தின் உதவியுடனும், இதனை உணர்ந்த பெற்றோர்களின் உதவியுடனும் மேற் கொண்டால் கூடிய பயன் அளிக்கும் என்பது எனது நம்பிக்கை. நான் இதைப் பற்றி இன்று நேற்று சிந்திக்கவில்லை. நான் உயர்தர வகுப்பிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 வருடமும் ஆசிரியராக பல தரப்பட்ட பாடசாலைகளில் பணியாற்றியதனால், மாணவர்களிடையே காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும், அதற்குரிய காரணங்களை அவர்களுடனும், பெற்றோர்களுடனும் கலந்துரையாடுவதன் மூலம் புரிந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றுள்ளேன். இது பற்றி சந்தர்ப்பம் ஏற்படும் பொழுதெல்லாம் பெற்றோரிடம் விளக்கிக் கூறியும் உள்ளேன். பெற்றோர்களுக்கு அதனை விளங்கிக் கொள்ளும் திறன் இல்லை என்று கூறமுடியாது, ஆனால் அவர்களின் பேராசை அதற்கு இடம் கொடுப்பதில்லை. எத்தனையோ மாணவர்களே இதனை என்னிடம் கூறியுள்ளனர். தாங்கள் நிர்பந்திக்கப் படுவதாக முறையிட்டுமுள்ளார்கள். எனவே காலம் தாழ்த்தாது இதையிட்டு நாம் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இனி மேலும் நாம் இதைப் பற்றி சிந்திக்காது விட்டால் எமது வருங்கால சந்ததியினரின் கல்வி நிலையும், எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடும். இங்கு நான் ஓர் உண்மையை எடுத்துக்கூற விரும்புகின்றேன். மிக அண்மைக்காலமாக அதாவது 10, 15 ஆண்டு காலமாக "Tuition" என்னும் ஓர் "கல்விக் கொல்லி" தலை தூக்கியதன் காரணமாகவும் வியாபார நோக்கில் இது நடை பெற்று வருவதாலும் இதனால் கவரப்பட்டு மாணவர்கள் சுயசிந்தனையையும், சுய ஆற்றலையும் விருத்திசெய்யும் ஆற்றலை இழக்கின்றனர். இதனை அவர்கள் மிகவும் காலம் தாழ்த்தியே உணர்ந்து மனம் வருந்துவதை நாம் கண்கூடாக காண்கின்றோம்.

உதவி, வழிநடத்தல் போன்றவை சராசரியிலும் குறைந்த புத்தி கூர்மையுள்ள மாணவர்களுக்கு உதவியளிக்குமே அன்றி புத்தி சாதுரியமுள்ள மாணவர்களுக்கு இது உதவுவது இல்லை. அவர்களை அறியாமலே அவர்களின் ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. அவர்கள் சிந்திப்பதற்கு அவர்களுக்கு உந்துதலோ, சந்தர்ப்பமோ அளிக்கப் படுவதில்லை. இதனை நாம் மாணவர்களின் பெறு பேறுகளில் இருந்து அறிய முடிகின்றது.

பிள்ளைகளின் சுய சிந்தனை சிறு வயதில் இருந்தே முறியடிக்கப் படுகின்றது. அதாவது 3 அல்லது 4 வயதில் இருந்தே பெற்றோர்களினால் பிழையாக வழிநடத்தப் படுகின்றார்கள். இதனால் ஏற்படும் முரண்பாட்டை ஓர் கிராமப்புற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனை ஓர் நகரப்புற மாணவனுடன் ஒப்பிடும் பொழுது நன்றாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. அது மட்டும் அல்லாது சிறு வயதில் அவர்கள் வளர்க்கப்படும் முறையும் அவர்களின் சிந்தனையை தூண்டுபவையாக அமைவது இல்லை. பிள்ளைகள் பிறக்கும் பொழுது மூளை, புலன் உறுப்புக்கள் யாவும் நன்றாக விருத்தி அடைந்த நிலையிலேயே பிறக்கின்றனர். பின்னர் அவர்களின் திறன்கள் வேறுபடுவதற்கு பெற்றோர்களே காரணமாகின்றனர். ஒரு சில மணித்தியாலங்கள் ஆவது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் கழிப்பார்களாய் இருந்தால் இன்றைய பிள்ளைகள் எவ்வளவு முன்னேற்றம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதை அறிய முடியும். அநேகமான பெற்றோர்கள் தங்கள் அனுபவங்களையும் தங்கள் காலகட்டத்தில் இருந்த நிலைகளையும் கருத்தில் கொண்டே பிள்ளைகளை வழிநடத்த முற்படுகின்றார்கள்.

ஆனால் இன்று சகல துறைகளிலும் அதிதுரித வேகத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. அதற்கு ஏற்ப எமது இளம் சந்ததியினர் தங்களை இட்டுச் செல்லாவிட்டால் எமது வருங்கால சந்ததியினர் பல நூற்றாண்டு காலம் கல்வியில் பின்தங்க வேண்டிய நிலை ஏற்படும். பிள்ளைகள் காலை தொடக்கம் மாலை வரை பாடசாலைக்கும் பின் "Tuition Centre" இக்கும் அலைந்து திரிவதனால் அவர்கள் தம் பாடப் புத்தகங்களையே திறந்து பார்ப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. இதனால் அவர்கள் வாசிப்பதை அறவே வெறுக்கின்றார்கள். வாசிப்பதனாலேயே ஒருவன் தன் அறிவைப் பெருக்க முடியும். சிந்தித்துச் செயலாற்ற முடியும். ஆனால் இன்றைய மாணவர்களில் பலர் மற்றவர்களின் மூளையிலேயே தங்க வேண்டிய நிலையில் உள்ளனர். நாம் செய்த ஆய்வுகளில் 5% மட்டுமே சுயமாக சிந்திக்கக் கூடியவர்களாக உள்ளனர். அத்தகையோரும் இன்றைய சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்வதனால் நாம் யாரால் வழிநடத்தப் படுகின்றோம் என்பதனை சாதாரண மக்கள் அறிவதில்லை.

இன்றைய கால கட்டத்தில் கல்வியும் வியாபாரமாக மாறிவிட்டது. அதற்கு உடந்தையாக பெற்றோர்களும் காணப்படுகின்றனர் எனவே கல்வி அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு அதற்கு தேவையான வழி முறைகளை கையாண்டால் மட்டுமே நாளைய சமுதாயம் விடிவு பெறும் என்பது திண்ணம்.

ஆக்கம் :- திருமதி மகேஸ் பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தின போட்டி - 2001
## கோட்டமட்டத்தில் வெற்றியீட்டியோர் விபரம்

| பிரிவு | நிகழ்ச்சி | மாணவர் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 2 | வாசிப்பு | திருமகள் மணிவண்ணன் | 3 |
| 2 | ஆக்கத்திறன் வெளிப்பாடு | பிரியதர்சினி ஆனந்தசிவம் | 1 |
| 4 | கட்டுரை, கவிதை | சுரேனுகா இராஜயோகாபூபதி | 2 |
| 5 | தமிழியற்கட்டுரை-திறனாய்வு | இராஜவதனி நாகராஜா | 2 |
| 5 | சிறுகதையாக்கம் | சிந்துஜா மகாகணபதீஸ்வரக்குருக்கள் | 2 |
| 2 | பேச்சு | ஆரணி செல்வலிங்கம் | 3 |
| 3 | பேச்சு | விஜிதா தர்மகுலசிங்கம் | 2 |
| 4 | பேச்சு | சூசாயினி சந்திரகுமாரன் | 1 |
| 2 | பாவோதல் | கோபிகா குலசிங்கம் | 1 |
| 3 | பாவோதல் | தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் | 1 |
| 5 | பாவோதல் | சரண்யா சிவஞானசுந்தரம் | 1 |
| 2 | இசை தனி | இப்பிரகஸ்வினி ரஞ்சன் | 1 |
| 2 | நடனம் | இராஜசொருபி பரமானந்தம் | 3 |
| 4 | நடனம் | அனித்தா நடராஜா | 2 |
| 5 | நடனம் | பகிரதா அழகரட்ணம் | 1 |
| | இலக்கிய நாடகம் | | 2 |
| | இசை நாடகம் | | 1 |

## வலயமட்டத்தில் வெற்றியீட்டியோர் விபரம்

| பிரிவு | நிகழ்ச்சி | மாணவர் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 2 | ஆக்கத்திறன் வெளிப்பாடு | பிரியதர்சினி ஆனந்தசிவம் | 2 |
| 4 | கட்டுரை, கவிதை | சுரேனுகா இராஜயோகபூபதி | 2 |
| 4 | பேச்சு | சூசாயினி சந்திரகுமார் | 2 |
| 2 | பாவோதல் | கோபிகா குலசிங்கம் | 1 |
| 3 | பாவோதல் | தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் | 1 |
| 5 | பாவோதல் | சரண்யா சிவஞானசுந்தரம் | 2 |
| 2 | இசை தனி | பிரகஸ்வினி ரஞ்சன் | 2 |
| | நடனம் | பகிரதா அழகரட்ணம் | 2 |
| | இலக்கிய நாடகம் | | 2 |
| | இசை நாடகம் | | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டமட்டத்தில் வெற்றியீட்டியோர் விபரம்

| பிரிவு | நிகழ்ச்சி | மாணவர் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 2 | பாவோதல் | கோபிகா குலசிங்கம் | 2 |
| 3 | பாவோதல் | தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் | 1 |
| | இசை நாடகம் | | 1 |

மாகாணமட்டத்தில் வெற்றீயீட்டியோர் விபரம்

| நிகழ்ச்சி | மாணவர் பெயர் | இடம் |
|---|---|---|
| பாவோதல் | தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் | 2 |
| இசை நாடகம் | | 1 |

## பொதுத் திறமைகள்

இலங்கை வங்கியினால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் செல்வி சாரூபா சரவணபவான் ஜனாதிபதி பரிசைப் பெற்றார் (1999).

திருமதி ச. நாகராசா ஆசிரியர் கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்துள்ளார் (1999-2000).

வட - கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம் ஒவ்வொரு அங்கத்துவப் பாடசாலையின் சிறந்த மாணவர் ஒருவருக்கு அளிக்கவிருக்கும் 2001ஆம் ஆண்டு பொன் விருது பெறுவதற்கு சிறந்த மாணவியாக காயத்திரி சிற்சபேசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reflections

When I reflect
How my life was spent
These six decades
I must confess – they
were fruitful; in case
I meet the pilot face to face
I can smile and make Him smile
Complacently: For He knows
That I care for fellow men-
I served them well and now
Having reached the last lap
of my life- I continue the race
to the finish-
Then He will hold me-
At the finishing line-
And put my name in the list
of those who loved Humanity

By
Thilaka Wijeyaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்புக்கிளை

# ஏழாம் ஆண்டு (2000) அறிக்கை

## 29.01.2000 தொடக்கம் 03.02.2001 வரையும்

சங்கத்தின் ஆறாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் இருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 15 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

நடப்பு ஆண்டின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் – திருமதி லீலா நாகரத்தினம்
– திருமதி புஷ்பம் சுப்பிரமணியம்

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

தலைவி – செல்வி சற்சொரூபவதி நாதன்

உபதலைவர்கள் – திருமதி தயாநிதி செல்வநாயகம்
– திருமதி பொன்மலர் கந்தசாமி
– திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்

பொதுச்செயலாளர் – திருமதி சிவகாமி அம்பலவாணர்

உதவிச்செயலாளர்கள் – திருமதி விமலா மணிவாசகன்
– திருமதி திலகவதி வீரசிங்கம்

பொருளாளர் – திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
உதவிப்பொருளாளர் – திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக்குழுவினர் –

திருமதி ருக்மணி அரசரத்தினம்
செல்வி ஞானலக்ஷ்மி பாலசிங்கம்
திருமதி தனவதி கனகரட்ணம்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி நந்தினி மோகன்
திருமதி நாகேஸ்வரி கனகசபை
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன்
திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்
திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்
திருமதி மனோரஞ்சிதம் சிவானந்தராசா
திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்
திருமதி இந்திராணி சேமசுந்தரம்
செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
திருமதி கௌரி தேவசேனாதிபதி
திருமதி தற்பராதேவி தில்லைநாதன்
திருமதி சிந்தாமணி வன்னியசேகரம்
திருமதி திலகா விஜயரத்தினம்
திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்

கணக்குப் பரிசோதகர் – கணேசலிங்கம் அன்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16-B, Schofield Place, கொழும்பு 3

இந்த வருடம் பின்வரும் செயல்களை ஈடேற்றுவோம் எனத் தீர்மானம் எடுத்தோம்.

1. எங்கள் கல்லூரியைத் தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்துதல் என்பது – அதற்கு திரு. தில்லைநடராசா அவர்களின் உதவியை நாடுவோம் எனத் தீர்மானித்தோம். பின் வேண்டிய ஆவணங்களை உரிய அதிகாரிகளிடம் கொடுத்துள்ளோம்.

௨. புது வருட மலிவு விற்பனை ஒழுங்கு செய்தல் – ஆனால் தவிர்க்கமுடியாத காரணங்களால் நடத்தமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சங்க அங்கத்தவர்களுக்கு சிறந்த கல்விமான்களின் விரிவுரைகளை நிகழ்த்துதல் – அதில் ஒன்று டாக்டர் ஜெயராஜசிங்கத்தை (Psychologist) மனனோயியல் சிசிச்சை முறை பற்றி ஒரு சொற்பொழிவாற்றும்படி கேட்பதாகத் தலைவி கூறினார். அதுவும் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் நடத்தமுடியவில்லை.

4. கல்லூரிக்கு இந்த ஆண்டு ஒரு மேலிருந்து படம் காட்டும் கருவி (overhead projector) உம் ஒரு வழுக்கி படம் காட்டும் கருவி (slide projector) உம் வாங்கி அனுப்புவது – மேலிருந்து படம் காட்டும் கருவி (overhead projector) வாங்கி அனுப்பிவிட்டோம். வழுக்கி படம் காட்டும் கருவி (slide projector) இன்னும் அனுப்பவில்லை.

5. கொள்ளுப்பிட்டி சேலான் வங்கியில் ஒரு வங்கிக்கணக்கைத் திறப்பது. – இது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

6. இரத்மலான இந்துக் கல்லூரிக்குச் சென்று அங்குள்ள மாணவர்களுடன் அன்பாகக் கதைத்து அறிவு புகட்டும் சேவையை செய்வது.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் முயற்சியினால் ௨௦௦௦ ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதிக்குச் சென்று சிற்றுண்டி வழங்கி மாணவருடன் கலந்துரையாடி வந்தோம். அப் பிள்ளைகள் தாயன்பை எதிர்பார்க்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சில அங்கத்தவர்கள் தொடர்ச்சியாகச் சென்று மாணவர்களுக்குச் சேவை செய்கிறார்கள் என அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள் –

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 25.03.2000 | 24, டீல் பிளேஸ் ஏ, கொழும்பு 3 | 10 |
| 20.05.2000 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 10 |
| 15.07.2000 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 10 |
| 24.09.2000 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 12 |
| 04.11.2000 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருந்து படம் காட்டும் கருவி (overhead projector)
Model - ELMO HP 2850S
Make/Origin – Elmo/Japan,
ஒன்றும் 1 packet Transparency யும்

Ceylon Business Appliances Ltd., 112, Reid Avenue, Colombo 4 இல் இருந்து ரூபா 34,475/63 கொடுத்துக் கொள்வனவு செய்தோம். இவற்றை S S Enterprises, 220, Keyser Street, Colombo 11 மூலம் எங்கள் கல்லூரிக்கு 20.08.2000 அன்று அனுப்பி வைத்தோம்.

இவை கிடைத்ததாகவும் அதற்கு அங்கு தான் ரூபா 1,900 கொடுத்ததாகவும் கல்லூரி அதிபர் திருமதி ஜெயராஜா தொலைபேசி மூலம் 20.09.2000 அன்று தெரிவித்தார். அத்துடன் தங்களிடம் நல்ல சபைக்கூடம் (Auditorium) இல்லாத படியால் ஒரு திரை (screen) இருந்தால் படம் காட்டுவதற்கு உதவியாக இருக்கும் என அதிபர் தெரிவித்தார்.

எனவே நாங்கள் ஒரு Tripod Stand Screen,
Model – Apollo,
Type – Tripod,
Manufacturer – Apollo Presentation Products, USA,
Features – Heavy gauge extruded aluminium legs,
Camlok roller system,
Black masking borders,
Patented toe release,
Size – 70" x 70"

Ceylon Business Appliances Ltd., 112, Reid Avenue, Colombo 4 இல் இருந்து ரூபா 8,707/50 கொடுத்துக் கொள்வனவு செய்தோம். இதையும் S S Enterprises, 220, Keyser Street, Colombo 11 மூலம் எங்கள் கல்லூரிக்கு 19.12.2000 அன்று அனுப்பி வைத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நாதம் இதழ் 6, 100 பிரதிகள் செய்ததாக திருமதி சிவகாமி அம்பலவாணர் தெரிவித்தார்.

இந்த வருடம் ஒரு ஒன்று கூடல் நிகழ்ச்சியை இராப் போசன விருந்துடன் ஒழுங்கு செய்து, அந்த நிகழ்ச்சியில் அங்கத்தவர்களை அவர்களுடைய குடும்பத்தினருடன் அழைப்போம் எனவும் அப்பொழுது, யாழ்நாதம் இதழ் 6 றை வெளியிடலாம் எனவும் தீர்மானித்தோம். இந்த நிகழ்வை திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும் திருமதி சிவகாமி அம்பலவாணரும் ஒழுங்கு செய்வதாகக் கூறினார்கள்.

ஒன்றுகூடல் நிகழ்வுக்கு முன்னாள் ஆசிரியைகளையும் பழைய மாணவிகளையும் சேர்த்துக் கொள்வதற்கு முன்னாள் ஆசிரியை திருமதி மகேஸ் பரமநாதன் அவர்கள் பெரும் முயற்சி எடுத்து எங்களுடன் ஒத்துழைத்தார்கள்.

ஒன்றுகூடல் நிகழ்வு 2000-11-18ஆம் திகதி சனிக்கிழமை கொள்ளுப்பிட்டியில் உள்ள சிறீ மாரீஸ் ஹோட்டலில் இராப் போசன விருந்துடன் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்நாதம் இதழ் 6 றை வெளியிட்டோம்.

இந்த நிகழ்ச்சிகளில் எமது கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையும் சங்கத்தின் போஷகரில் ஒருவருமாகிய திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள்.

தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் எல்லோரையும் வரவேற்று உரையாற்றினார். சங்கத்தின் செயற்பாட்டைத் தெளிவாக அங்கு தெரிவித்தார். பல நிகழ்வுகளையும் அங்கு நினைவுகூர்ந்தார். திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் தன்னைக் கௌரவித்ததற்கு நன்றி கூறினார்கள்.

யாழ்நாதம் இதழ் 6 இன் முதல் பிரதியை பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பிரதம அதிதியான திருமதி லீலா நாகரத்தினம் அவர்களுக்குக் கையளித்தார். இரண்டாவது பிரதியை நூல் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் முன்னாள் ஆசிரியை திருமதி மகேஸ் பரமநாதன் அவர்களுக்குக் கையளித்தார். அன்று நடந்த விற்பனையின் மூலம் ரூபா 8,000 எமக்குக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வைபவத்தின் நிகழ்வினை ஒரு கட்டுரையாக எழுதி வீரகேசரிக்கு கொடுத்தோம். அவர்கள் அதை 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களுக்குப் புதிதாக அவர் ஆரம்பிக்கும் கணனிக் கல்வித் திட்டத்தில் 2001 ஆம் வருடத்தில் எமது கல்லூரியையும் உள்ளடக்கி 15 கணனிகள் கிடைக்க உதவும்படி கடிதம் எழுதியுள்ளோம்.

எங்கள் சங்கக் கூட்டங்களை நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை **(Audit)** செய்து தந்த திரு சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்த திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எங்கள் சங்கத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொருபவதி நாதனுக்கும் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும் நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது கல்லூரியின் பழைய மாணவிகள் எல்லோரும் எமது பழைய மாணவிகள் சங்கத்தில் சேர்ந்து தமது கல்லூரிக்காகப் பாடுபடவேண்டும் என்பதே எனது விருப்பம். இறைவன் அருளாலும் சங்க அங்கத்தவர்கள் திறமையாலும் இது சாத்தியமாகும் என எதிர்பார்க்கிறேன்.

திருமதி சிவகாமி அம்பலவாணர்
கௌரவ செயலாளர்
03.02.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சைலம்

நாம் பரமேஸ்வரனையும், பார்வதி அம்மையையும் தரிசித்தமைக்குப் பிள்ளையார் சாட்சி சொல்வது "திருப் பருப்பதம்" எனப்படும் "ஸ்ரீ சைலம்" ஷேத்திரத்தில் ஆகும். இது ஆந்திராவில் கர்னு மாவட்டத்தில் உள்ளது. சாட்சி கணபதியைப் பற்றிக் கேள்விப்பட்டது முதல், பிள்ளையார் எனக்கு சாட்சி சொல்ல வேண்டும் என்ற எண்ணம் என்னுள் வியாபித்தது. அதுவும் திருவருளால் தான். இத் தேடல் என்னுள் உதித்த சுமார் பத்து வருடங்களின் பின்பே அப் புண்ணியபூமியைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அவனருளாலே அவனை வணங்கும் பாக்கியம்.

பயண வசதி கருதி, முதலில் மந்திராலயம் சென்று, அங்கு 700 ஆண்டுகள் பிருந்தாவனத்தில், சமாதியில் இருந்து பக்தர்கட்கு அருள் வழங்கும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை வணங்கி, அவர் ஆசி பெற்று, பன்னிரு ஜோதிர் லிங்கங்களுள் ஒன்றான ஸ்ரீமல்லிகார்ஜுன சுயம்பு லிங்கத்தைத் தரிசிக்க ஸ்ரீசைலம் சென்றோம். அஷ்டமா சக்திகளில் பிராமணி சக்தியான அம்பிகை ஸ்ரீ பிரமராம்பிகா சமேத அருள் மிகு மல்லிகார்ச்சுன சுவாமி இங்கு விரும்பி உறைந்து பக்தர்கட்கு அருளாசி வழங்குகின்றார். 108 சக்தி பீடங்களில் இத்தலமும் ஒன்று. திரிபுரங்களை இறைவன் பொடி செய்த போது அங்குள்ள சிவலிங்கங்கள் தெறித்து ஸ்ரீ சைலத்தில் வீழ்ந்து அங்குள்ள கோடானுகோடி சிவலிங்கங்கள் ஆயின என்பர்.

பிள்ளையாருக்கும் முருகனுக்கும் இடையே, யாருக்கு முதலில் திருமணம் நடைபெறும் என்று ஆரம்பித்த போட்டியில், இருவரும் இறைவனிடம் சென்று, தமக்குத்தான் முதலில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று விண்ணப்பித்தனர். இறைவனும் அவர்களிடம் யார் முதலில் உலகைச் சுற்றி வருகின்றார்களோ அவர்கட்குத்தான் முதலில் திருமணம் என்றார். உடனே முருகன் தன் மயில் வாகனத்தில் ஏறிப் புறப்பட்டு விட்டார். பிள்ளையாரால் அப்படி எலி மேல் ஏறிச் சுற்றி வர முடியுமா? அவர் அம்மையையும், அப்பனையும் ஒரு சேர இருக்கச் சொல்லி அவர்களைச் சுற்றி வலம் வந்து, நீங்கள் தானே பிள்ளைகட்கு உலகம் உங்களைச் சுற்றி வந்தால் உலகத்தைச் சுற்றி வந்ததாகத் தானே பொருள், என்று சொல்லி முதலில் திருமணம் செய்து கொண்டார். உலகைச் சுற்றி வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் பிள்ளையாருக்குத் திருமணம் முடிந்ததை அறிந்து, பெரும் கோபம் கொண்டு ஸ்ரீ சைலம் வந்து ஒளித்து இருந்தார். இறைவனும், இறைவியும் வெள்ளி கைலயங்கிரியை விட்டு, முருகனைத் தேடி இங்கு வந்து சிலகாலம் இங்கு தங்கி முருகன் கோபத்தைத் தணித்து, அழைத்துச் சென்றனர். இங்கு தங்கி இருந்த போது இந்த இடம் மிகவும் பிடித்து விட்டமையால் பரமேஸ்வரன் இங்கு சுயம்பு இலிங்கமாகத் தோன்றினார்.

அருணாகரன் என்று எதனாலும் இறப்பு ஏற்படாத, சாகாவரம் பெற்ற கொடிய அசுரனை அழிக்க ஜெகன்மாதா பிரமரங்களை (வண்டுகளை)த் தொடுத்து மாலையாகத் தரித்துக் கொண்டு பிராமஸ்ரீ சக்தி என்ற பெயருடன் அசுரனுடன் யுத்தம் செய்த போது, அந்த வண்டுகள் அசுரனையும் ஏனைய அரக்கர்களையும் கொட்டி, இரத்தத்தை உறிஞ்சி அனைவரையும் அழித்து விட்டன.

இந்த ஜெகன்மாதா ஸ்ரீ சைலத்தில் ஓர் அரசகுமாரியாக அவதரித்து, சிவபெருமானை அளவு கடந்த பக்தியோடு பூசித்து, தவம் இருந்து அவரையே தம் கணவராக அடைய விரும்பினாள். இறைவனும் அவள் கனவில் தோன்றி ஓர் வண்டைக் காண்பித்து, அவ்வண்டைத் தொடர்ந்து சென்று அது தங்கும் இடத்தில் தனக்காகக் காத்திருக்கச் சொன்னார். அரசகுமாரியும் அவ்வாறே வண்டைத் தொடர்ந்து சென்று காத்திருந்த போது, சிவபெருமான் முதியவர் வடிவத்தில் வந்து அவளைத் திருமணம் செய்து கொண்டார். இவர் தான் ஆலயத்தில் உள்ள கிழமல்லிகார்ஜுன லிங்கம். வண்டினால் (பிரமரத்தால்) கொண்டு வரப்பட்ட இளவரசி தான் அம்பிகை பிரமராம்பாள் என்பர்.

கிருதயுகத்தில் இரண்யகசிபுவாலும், திரேதாயுகத்தில் ஸ்ரீ இராமபிரானாலும், துவாபர யுகத்தில் பஞ்சபாண்டவர்களாலும், கலியுகத்தில் ஜகத்குரு சங்கராச்சாரியார் போன்ற பலராலும் வணங்கப்பட்டு ஆசி பெற்ற புண்ணிய ஸ்தலம். காலக்கணக்குத் தெரியாத இத்தலம் பதினையாயிரம் அடி உயரம் உள்ள மலையின் உச்சியில் உள்ளது.

பூலோக கைலாயமாக விளங்கும் இத்தலத்தில் பிறந்தாலும் முக்தி, அத்துடன் ஸ்ரீ சைலம் சிகரத்தைக் கண்ணால் பார்த்தாலும் முக்தி, ஜென்ம சாபல்யம் ஏற்படும். இத்தலத்திற்கு எட்டுத் திக்குகளிலும் எட்டு ஷேத்திரங்கள் உள்ளன. பிரதான நான்கு திசைகளிலும் உள்ள ஆலயங்களைத் தரிசித்துக் கொண்டு நான்கு வழிகளாலும் பக்தர்கள் ஸ்ரீசைலம் சேர்வர். முன்நாளில் நடக்கமுடியாதவர்கள் டோலி வைத்து மேலே தூக்கி வரப்படுவர். இப்பொழுது பஸ் வசதி ஆலயம் வரை உள்ளது. எத்திசையில் இருந்து புறப்பட்டாலும் ஆறுமைல் வந்ததும் சிகரேஸ்வரம் ஷேத்திரத்தை வந்தடைவர் இங்குள்ள உயரமான சிகரத்தில் ஏறி அங்குள்ள நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சைல ஆலய கோபுரத்தையும், சிகரத்தையும் தரிசிப்பர். இப்படி பார்ப்பவர்கட்கு மறு பிறவி இல்லை.

ஸ்ரீ சைலம் ஒரு மைல் தொலைவில் இருக்கும் போதே, திருப்பருப்பதம் நகரின் ஆரம்பத்தில் சாட்சி கணபதி ஆலயம் உள்ளது. வருகின்ற பக்தர்கட்குச் சாட்சியாக விளங்கும் கணபதியை வணங்கிய பின்பே தொடர்ந்து செல்ல வேண்டும். ஸ்ரீ சைல தரிசனம் முடித்துத் திரும்பும் போதும் சாட்சி கணபதியை வணங்கி அவரது ஆசி பெற்றே செல்ல வேண்டும். அவர் நாம் திருப்பருப்பதம் தரிசனம் செய்தமைக்குச் சாட்சியாக இருப்பார்.

தைமாதப் பிறப்பு (உத்தராயணம்-கன்னட மக்களின் மகர சங்கராந்தி) தெலுங்கு வருடப் பிறப்பு (யுகாதி) மகாசிவராத்திரி, நவராத்திரி தினங்கள் இங்கு மிக்க விமரிசையாகக் கொண்டாடப்படும். நவராத்திரி தினத்தின் இரண்டாம் நாள் அன்று ஸ்ரீ சைலம் செல்லும் பாக்கியம் கிடைத்த போது, பிரமராம்பாள் சமேத மல்லிகார்ச்சுன சுவாமி பத்துத்தலை இராவணன் பெயர்த்த வெள்ளியங்கிரியில் பவனி வந்து கோபுர வாயிலில் எங்கட்குக் காட்சி தந்தார். பக்கத்தில் துர்க்கை அம்பாள் அலங்கார ரூபியாக அமர்ந்து இருந்தாள். சாட்சி கணபதி காண்பித்த கயிலாயக் காட்சியைக் கண்டு கண்கள் பனிக்க, மனம் மொழி, மெய்யால் வழிபட்டோம். திருவருளின் திறத்தை வியந்து, நினைத்து நினைத்து மனம் உருகி நின்றோம்.

அடுத்த நாட்காலை மூலவர் தரிசனம் காண ஆலயம் சென்றோம். உள்ளே பல கோவில்களும், சந்நிதிகளும் கண்களுக்கும், பக்தி உள்ளத்திற்கும் விருந்தாகின. சித்தி சமேதராக உள்ள பெரிய விநாயகப் பெருமானை வணங்கிக் கொண்டு உள்ளே சென்றோம். இங்கே வேறு எக்கோயிலிலும் இல்லாத சிறப்பு தூனி தரிசனமாகும். பக்தர்கள் கால்களைக் கழுவாமல் தூசியோடு வந்து ஸ்ரீ மல்லிகார்ச்சுன லிங்கத்தைத் தொட்டுத் தழுவி தரிசிக்கலாம். பக்கத்தில் ஆயிரம் லிங்கங்களும் ஓரே லிங்கமாக அவதரித்த சகஸ்ரலிங்கம் சந்நிதி உள்ளது. பழைய லிங்கமான முதிய மல்லிகார்ச்சுனர் ஆலயம் சிறியதாக உள்ளது. மேற்கில் அன்னை பிரமராம்பாள் ஆலயம், வேலைப் பாடுகள் செய்யப்பட்ட கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. இதன் அருகில் ஆறு ஆலயங்கள் உள்ளன. அவை துவாபரயுகத்தில் பஞ்ச பாண்டவர்கள் திரௌபதியுடன் வந்து தரிசித்த பின் ஆளுக்கு ஒரு கோவில் நிறுவிச் சென்ற கோவில்கள் ஆகும். வயதே கணக்கிட முடியாத அளவு பழமை வாய்ந்த மரங்கள் மேடி, ஜுல்லி, ராலி என்பன காணப்படுகின்றன. இன்னொரு சிறப்பு அம்சம் இங்குள்ள மனோகரகுண்டம். மேலே தளமும், கீழே படிக்கட்டுகளும் உள்ள திருக்குளம். இங்கே பூகர்ப்ப வாஹினியான சரஸ்வதி நதியின் புனித நீர் உள்ளது. (சரஸ்வதி கண்களுக்குப் புலப்படாமல் பூமியின் கீழேதான் பாய்கின்றது) இது சகல பாவங்களையும் போக்கும் புனித தீர்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரேதாயுகத்தில் சீதா பிராட்டியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சீதா சகஸ்ரலிங்கத்தையும் தரிசிக்கலாம். பஞ்ச நந்தீஸ்வரர் ஆலயத்தில் ஒரே கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து நந்திகள் உள்ளன. அவற்றின் நடுவே பரமேஸ்வரனும், பார்வதி தேவியும் திருமணக் கோலத்தில் காட்சி அளிக்கின்றார்கள். இன்னும் பல ஆலயங்களும், சந்நிதிகளும் வழிபாட்டுக்கு உள்ளன. வியக்க வைக்கும் கண்ணாடி மாளிகைதான் பள்ளிஅறை. இரவு பள்ளிஅறைப் பூசை முடிந்ததும் இறைவனையும், இறைவியையும் சயனக் கோலத்தில் வைத்துச் செல்வர்.

இறைவன் திருவருளால் கோயில் உள்ளே உள்ள கோவில்களிலும், சந்நிதிகளிலும் வீற்றிருக்கும் மூர்த்திகளின் தரிசனங்களைப் பெறும் பாக்கியம் எங்களுக்குக்கிடைத்தது. ஒவ்வொரு மூர்த்தியினதும் கீர்த்தியை முன்னரே தெரிந்து வைத்திருந்தால் மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்யமுடியும். திருக்கைலாய தரிசனம் பெற்ற திருப்தியுடன், வெளியே வந்தோம்.

வடகிழக்குத் திசையில் பதினையாயிரம் அடி இறக்கத்தில் உள்ள பாதாள கங்கையே இக்கோவிலின் தீர்த்தம். இதுவே கிருஷ்ணாநதி. தற்பொழுது நாகார்ச்சுனசாகர் அணையை இங்கு கட்டி உள்ளனர். இதன் புனிதநீர் பச்சைநிறம். கணவனுக்குத் துரோகம் செய்தவள் குளித்த களங்கத்தை கங்காநதி ஏற்று அவளைப் புனிதம் ஆக்கினாள். அந்த மாசினைக் கங்கை இப்பாதாள கங்கையில் நீக்கியதால் இதன் நீர் பச்சை நிறமாக மாறியதாம். புனித கங்கைக்கே புனிதம் அளித்த திவ்விய தீர்த்தம் இப்பாதாள கங்கை. இங்கு உள்ள கற்கள் லிங்கவடிவில் உள்ளன. அதனால் இங்கு ஸ்நானம் செய்பவர்கள் பாவ விமோசனம் பெறுவர்.

திருப்பருப்பதம் எனப்படும் ஸ்ரீ சைலம் கோவிலை மையமாகக் கொண்டு சுற்றிலும் ஏராளமான திவ்விய ஷேத்திரங்கள் அமைந்துள்ளன. எல்லா ஸ்தலங்களையும் ஆசாரசீலராய் விரதம் மேற்கொண்டு முறைப்படி வழிபட்டு மல்லிகார்ச்சுன ஜோதிர்லிங்க வழிபாட்டிற்கு வர சுமார் ஒரு வருடகாலம் பிடிக்கும் என்பர். நந்தியாலுக்கு பத்து மைல் தொலைவில் நவநந்திகள் உள்ளன. இவற்றைத் தரிசித்து பிரதட்சணம் செய்து வழிபடுபவர்கட்கு நூற்றுக்கு மேற்பட்ட அஸ்வமேத யாகபலனும், ஆயிரம் ஆண்டுக் காலம் பூசை செய்த பலனும் கிடைக்கும். அளப்பரிய சரித்திரமும், கீர்த்தியும், வரலாறும் உள்ள இப்புண்ணிய பூமியின் பெருமையை ஸ்ரீ சைலமான்மியம் என்னும் நூல் விரித்துக் கூறும்.

ஆக்கம்: திரு. வை. இரகுநாதமுதலியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பழைய பேனாவின் சுய சரிதை

"தற்பொழுது நான் ஒரு பழைய பேனாவாக வீதி ஓரத்தில் கிடக்கிறேன். எனது கடந்தகால வாழ்க்கையைப் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்."

"ஓர் இருட்டறை, அதற்குள் நானும் என்னைப் போல எனது நண்பர்களும் இருந்தோம். ஓர் நாள் ஒரு பெரியார் என்னையும் எனது நண்பர்களையும் எடுத்துக் கொண்டு ஓர் கடைவியாபாரியிடம் கொடுத்தார். அக்கடையில் நாம் பல நாட்கள் வாழ்ந்தோம். ஒருநாள் ஒரு சிறிய பையன் கடைக்கு வந்து எனக்கு ஓர் லெக்சி பேனாவை தாருங்கள் என்று கடைக்காரரிடம் கேட்டான். கடைக்காரர் என்னை எடுத்து அப்பையனிடம் கொடுத்து பணத்தையும் பெற்றுக்கொண்டார். அப்போது தான் எனக்குத் தெரியும் நான் லெக்சி இனத்தைச் சேர்ந்தவன் என்று."

"அப்பையன் என்னை எடுத்துக் கொண்டு பையில் போட்டுச் சென்றான். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஆனால் மறுபக்கம் எனது நண்பர்களை பிரிகிறேன் என்று கவலையாகவும் இருந்தது. எனது வாழ்க்கை மிகவும் ஆனந்தமாக இருந்தது. அச்சிறுவன் என்னை ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு கொண்டு செல்வான். அவன் பெருமையோடு என்னை எடுத்து எழுதுவான். அவன் எங்கு படிக்கச் சென்றாலும் என்னை எடுத்து அவனது பையில் போட்டுக் கொள்வான். இப்படியாக எனது வாழ்க்கை கழிந்தது. என்னிலுள்ள மை குறைந்து முடிந்தது. அச்சிறுவன் என்னை எடுத்து எழுத எழுத நான் மை இல்லாமல் தவித்தேன். அவன் பாடசாலையால் வரும் வழியில் என்னை எடுத்து எறிந்தான். அப்படி எறியப்பட்ட நான் இன்னும் ஓர் வீதியோரத்தில் கிடக்கின்றேன் இதுதான் எனது வாழ்க்கையில் நடந்த சம்பவம்."

J. Vinesh
S.T.C
Year – 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேது யாத்திரை

சிவபூமியான இலங்கையை அணைத்து இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ளது சேதுக்கரை என்று வழங்கப்படும் கடற்கரை. சேது என்னும் சொல்லுக்குத் தமிழில் அணை என்று பொருளாகும். என்பதால் இது 'திருவணை' எனவும் அழைக்கப்படுகிறது.

தீர்த்தாண்டதானத்தில் தொடங்கி, உப்பூர் விநாயகரைத் தரிசித்து, தேவிபட்டணத்தில் நவக்கிரக வடிவான நவபாஷாணத்தில் நீராடி, பாம்பன் வந்து இறங்கி, பைரவ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தீர்த்த ஸ்நானத்திற்கு அதிகாரியாகிய பைரவரின் அனுமதியைப் பெற்று, பின்னர் ராமேச்வரம் வந்து அக்கினிதீர்த்தம் முதல் சர்வதீர்த்தம் வரை 64 தீர்த்தங்களிலும் ஸ்நானங்கள் முடித்து, தனுஷ்கோடிக்குச் சென்று, முக்திக்குப் படிகளாக விளங்கும் தத்துவங்களான படிகளை 36 ஸ்நானங்களால் கடந்து, தான ஜபங்கள் முடித்து, மீண்டும் ராமேச்வரம் வந்து, கோடிதீர்த்த ஸ்நானஞ்செய்து, மலைவளர் காதலி உடனுறையும் ஸ்ரீ ராமநாத சுவாமியை வணங்கி, மேல வாசல் விநாயகரிடம் விடை பெற்று, திருபுல்லணை என்ற தர்ப்பசயனம் சேர்ந்து, ஆதிசேதுவில் மூழ்கி, ஆதிஜகன்னாதரைத் தரிசனம் செய்து கொண்டு, பின்னர் ஆதிசிதம்பரம் என்னும் திருவுத்தரைகோசமங்கையை அடைந்து, நற்கதி நல்கும்படி அங்குள்ள நடராஜ மூர்த்தியின் திருவடிகளை வணங்கிப் பிரார்த்தித்து, சேது யாத்திரையை நாம் முடித்துக் கொள்ள வேண்டும் என்று ஆன்றோர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

<u>தீர்த்தாண்டம்</u>:- தேவகோட்டையிலிருந்து ஓரியூர் வழியாக திருப்புனவாயில் செல்லலாம், தொண்டியிலிருந்து சுந்தரபாண்டிய பட்டினத்திற்கு ஊடாக அதன் மேற்கில் 1 மைல் தொலைவில் உள்ள திருப்புனவாயிலுக்கு செல்லலாம். இது மதுரையிலிருந்து கிழக்கில் 60 மைல்களும், இராமேச்வரத்திலிருந்து வடக்கே 35 மைல்களும் இருக்கும். இங்கு விருத்தபுரீச்வரர் என்ற பழம்பதி நாதரைத் தரிசிக்கலாம். கருவறையில் மிகப்பெரிய சிவலிங்கம் உள்ளது. இங்கு பிரம தீர்த்தம் உள்ளது.

திருப்புன வாயிலிலிருந்து தென்கிழக்கே 3 மைலில் தீர்த்தாண்டதானம் உள்ளது. இது கடற்கரை ஊர். இங்கு உள்ள கடலில் சீதையைத் தேடி இளவலுடன் வந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி நீராடியதால் சிறப்புற்ற இடம். இங்கே இவர்களுக்கு தாகம் எடுத்ததாம். அப்போது வருணபகவான் இவர்களுக்காக ஒரு தீர்த்தம் ஏற்படுத்தித்தந்தார். அந்த நீரைப் பருகி, தாகத்தைத் தணித்து, இருவரும் அங்கே சற்று இளைப்பாறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிலுள்ள திருப்புனவாயில் ஆலயத்தில் பழம்பதிநாதரை வழிபட்டுக் கொண்டிருந்த அகத்திய முனிவர் தசரத குமாரர்களின் வருகையை அறிந்து அங்கு விரைந்தார். குறுமுனிவரைக் கண்டு ஆனந்தப்பட்டு வணங்கி எழுந்த சக்கரவர்த்தித் திருமகன், இராவணேச்வரனை வென்று சீதையை சிறை மீட்கும் வழியைப் பற்றி அவரிடம் வினவினார். இலங்கேச்வரன் பெரும் சிவபக்தனாதலால், அவனை வெல்வதற்கு ஸ்ரீராமபிரான் சிவனருளைப் பெற்றாக வேண்டிய அவசியத்தை அகத்தியர் வலியுறுத்தினார். அதன்படி ஸ்ரீராமரும் ஐந்தெழுத்து ஓதி சிவபெருமானை வழிபடவே, திருப்புனவாயிலில் உறையும் பழம்பதிநாதர், உமையவளுடன் விருஷபாருடராய் அவருக்குக் காட்சியளித்தார்.

அந்த அரிய காட்சியைக் கண்ட வருணன், சிவபெருமானிடம் அங்கேயே திருக்கோயில் கொண்டு விளங்கும்படியும், தன் பெயரால் அமைக்கப் பெற்ற 'வருண தீர்த்தத்தில்' மூழ்கி சுவாமியைத் தொழுபவர்கள் நற்கதியடைய அருள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவ்வாறே அருளாசி வழங்கிய சிவபெருமான், அங்கேயே திருக்கோயில் கொண்டார். திருப்புனவாயில் பழம்பதிநாதரே அங்கு உறைகிறார் என்பதை உணர்த்தும் பொருட்டு சுவாமி திருப்புனவாயிலை நோக்கி மேற்குப் புறமாகத் திருச்சந்நிதி கொண்டிருக்கிறார். சுவாமிக்கு சர்வதீர்த்தேசுவரர் என்றும் தேவிக்கு பெரியநாயகிஅம்மை என்றும் திருநாமங்கள் வழங்குகின்றன.

ஸ்ரீஇராமபிரானது தாகத்தைத் தீர்த்து சிவபெருமான் அவரை இந்த இடத்தில் ஆட்கொண்டதால் தீர்த்தாண்டதானம் என்ற பெயர் தோன்றியதாம். இப் பகுதியின் தென் கிழக்கில் ஒரு வெட்ட வெளியில் இருக்கும் "ராம பாதம்" என்ற சிறு கோயிலைத் தரிசிக்கலாம்.

<u>உப்பூர் பிள்ளையார்</u>:- இந்த விநாயகப் பெருமான் யுகயுகாந்திரமாக இங்கு எழுந்தருளியுள்ளார். சூரிய பகவானால் பிரதிஷ்டை செய்யப் பட்டவராதலால் 'வெய்யிலுகந்தவிநாயகர்' எனற திருநாமம் ஏற்பட்டது. 'உப்பூர் பிள்ளையார்' என்றும் அழைக்கப்படுகிறார்

தேவகோட்டையிலிருந்து ராமநாதபுரம் செல்லும்பாதையில் 35வது கி.மீ வந்ததும் இடப்புறம் திரும்புங்கள், அங்கிருந்து 8 கி.மீ உப்பூர் கிராமம் உள்ளது. அங்கு 'ராமர் பூஜித்த விநாயகரைத் தரிசியுங்கள்' என்ற அறிவிப்புப் பலகை இருக்கிறது. காரைக்குடி-ராஜசிங்கமங்கலம் செல்லும் பஸ்ஸில் உப்பூர் சென்றடையலாம்.

<u>நவபாஷாணம்</u>:- கணபதியின் அருளைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீ ராமபிரான், அடுத்து நவக்கிரகங்களைப் பூஜித்து, பிரீதி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில் ஒன்பது கருங்கல் போன்ற பாறைகளைப் பிரதிஷ்டை செய்து, அவற்றில் நவக்கிரங்களை எழுந்தருளச் செய்து, முறையாக வழிபட்டிருக்கிறார். அவற்றுக்கு நவபாஷாணம் என்று பெயர். அவை இருக்குமிடம் தேவிப் பட்டணம் என்று வழங்கப்படுகிறது. உப்பூரிலிருந்து தெற்கே 8 மைல் தொலைவிலுள்ள நவபாஷாணம் பாரத நாட்டிலேயே கடலில் அமைந்துள்ள ஒரே நவக்கிரகத் தலம் என்று கூறப்படுகிறது.

தேவிபட்டணத்தில் இருக்கும் சக்கரத் தீர்த்தம் என்ற திருக்குளத்தில் முதலில் ஸ்நானம் செய்து விட்டு கரையில் இருக்கும் விநாயகரைத் தரிசித்துக் கொண்டு கடற்கரைக்கு வரவேண்டும். அங்கு சமுத்திரம் ஒரு குளம் போல் காட்சியளிக்கிறது. நவக்கிரகங்களும் கடல்நீரில் பாதி முழுகியிருக்கின்றன. முழங்கால் அளவு தண்ணீரில் நின்று நவக்கிரங்களை கும்பிடலாம்.

<u>பாம்பன்</u>:- பைரவ தீர்த்த ஸ்நானம் செய்து பைரவரை வழிபட்டு அவரின் அனுமதியைப் பெற வேண்டும்.

<u>இராமேச்வரம்</u>:- 'அக்கினி தீர்த்தம்' என்ற கடலில் நீராடி தலை நிமிர்ந்தால் கண்ணில் படுவது ஸ்ரீ ஆதிசங்கரர் மண்டபமே சமுத்திரத்தை பார்த்தவாறு ஆஞ்சநேய மூர்த்தி. மனு நீதி சோழனை நினைவு படுத்துவது போல் பசுமாடு மணியை அடிப்பது போல் சிற்பம்.

இந்த மண்டபத்தை அடுத்து துவாதச லிங்கங்கள் என்ற 12 ஜோதி லிங்கங்களும் வரிசையாக பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கின்றன. கருவறைக்கு மேலே உள்ள கோபுரங்கள் அந்தந்த ஆலயங்களில் இருப்பதைப் போன்றே 'மினி' அளவில் காட்சி தருகின்றன. சங்கர மடத்திலிருக்கும் சரஸ்வதி கோயிலைச் சுற்றிலும் 21 பதி விரதாமணிகளைப் பற்றிய சிற்பங்கள் உள்ளன. மடத்தின் பின்புறம் கருங்கல் விமானத்தில் சிறு விநாயகர் கோயில் இருக்கின்றது.

ஸ்ரீராமநாத சுவாமி கோயிலில் 22 புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் நீராடிய பிறகே சுவாமி தரிசனம் செய்வது மரபு. தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதற்கு தேவஸ்தானத்தாருக்கு கட்டணம் செலுத்த வேண்டும். புதியவர்களுக்கு தீர்த்த இடங்கள் தெரியாத படியால் 'யாத்திரிகர்கள் புனிதநீர் வழிகாட்டி' சங்கத்தினரின் உதவியை நாடுவது நலம். "கைடு"களிடம் குறைந்த பணம் கொடுத்தால் அழைத்துச் சென்று அத்தனை தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து வைக்கின்றார்கள். 'சர்வ தீர்த்தம்' சுவாமி கோயிலுக்கு முன் உள்ளது. ஆலயத்தில் கடைசியாக ஸ்நானம் செய்ய வேண்டியது 'கோடி தீர்த்தம்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீஇராமநாத சுவாமி ஆலயத்திற்குக் கிழக்கில் ஒன்பது நிலைகளுடன் கூடிய 126 அடி உயரமுள்ள ராஜகோபுரமும், மேற்கில் 78 அடி உயரமுள்ள சிறிய கோபுரமும் உள்ளன. வடக்கிலும், தெற்கிலும் முற்றுப் பெறாத மொட்டைக் கோபுரங்கள் இருக்கின்றன. சுற்றிலும் உயர்ந்த மதிற் சுவர்கள் கம்பீரமாக எழும்பியுள்ளன.

கிழக்கு கோபுரத்தை கடந்து உள்ளே சென்றால் வடப்புறம் திரும்பி முதலில் ஆஞ்சநேயமூர்த்தியைத் தரிசித்துக் கொள்ளலாம். பின்னர் 'அனுப்பு' மண்டபத்தைக் கண்டு வியக்கலாம். இக்கோயிலுக்குப் பெருமை தரும் மண்டபங்களில் இது தலை சிறந்ததாகும். தூண்களில் உள்ள சிற்பங்கள் தவிர சீதா கல்யாணம், பக்த மார்க்கண்டேயர் போன்ற பல காட்சிகள் அமைக்கப் பெற்றுருப்பதையும், மேற்கூரையில் பஞ்ச தாண்டவம், சபைகளின் வரிசை முறைப்படி சித்திரிக்கப்பட்டிருப்பதையும் இங்கு கண்டு களிக்கலாம். இங்கு இருந்து 3ஆம் 2ஆம் பிராகாரத்தையும் கடந்து நந்தி மண்டபத்திற்கு வருகிறோம். உயர்ந்த தேக்கு மரத்தாலான கொடி மரம், தாமிரத்தகடு போர்த்தப்பட்டு தங்கமுலாம் பூசப்பட்டு 'தகதக' வென மின்னுகிறது. அதற்கு முன் பிருமாண்டமான நந்தி, 22 அடி நீளம், 12 அடி அகலம் 17 அடி உயரம், (கருங்கல் சிலையல்ல, சுதை வடிவம் தான்) சுவாமியை நோக்கியவாறு வீற்றிருக்கிறது. கோயிலில் ஆஞ்சநேயர் தாபித்த லிங்கத்தை வணங்கிய பின் இராமர் தாபித்த மண்லிங்கத்தை வணங்க வேண்டும். அனுமானின் வால் பட்ட 3 அடையாளங்களை இராமர் தாபித்த லிங்கத்தில் காணலாம்.

அம்பாள் சந்நிதிக்குச் செல்ல, ராஜகோபுரத்திற்குத் தெற்கே ஒரு தனி வழியிருக்கிறது. முன்னால் உள்ள கல்யாண மண்டபத்தில் நுழைந்து, 3ஆம் 2ஆம் பிராகாரங்களைக் கடந்து சுக்கிரவார மண்டபத்தின் வழியே அம்பாள் சந்நிதியை அடையலாம். ஸ்ரீ ராமநாத சுவாமிக்கு வலப்புறத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பிகை தனிக் கோயில் கொண்டிருக்கிறாள். இக்கோயிலிலுள்ள சிறப்புக்களில் இதுவும் ஒன்றாகும். கருவறையில் ஜகன்மாதா நான்கு திருக்கரங்களோடு, அபய வரத முத்திரைகளுடன் கருணையே வடிவாக அருள் மழை பொழிந்து கொண்டு ஸ்ரீ பர்வதவர்த்தனியாக வீற்றிருக்கின்றாள்.

தேவியை ஸ்ரீ சக்கர வடிவத்திலும் அங்கு தரிசிக்கலாம். சுவர்ணத்தினாலான அந்த ஸ்ரீ சக்கரத்திற்கே பூஜை நடை பெறுகிறது. அம்மன் சந்நிதியையும், ராமநாதர், விச்வநாதர் சந்நிதியையும் இரண்டாவது பிராகாரம் சுற்றி வருகிறது. ராமநாத சுவாமியையும், விச்வநாத சுவாமியையும் சுற்றி முதல் பிராகாரம் அமைந்திருக்கிறது.

பள்ளியறையிலிருக்கும் அம்மன், சுவாமி இரு திருவுருவங்களின் பொலிவு வார்த்தைகளால் வடிக்க முடியாததாகும். ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு இந்த கோயிலில் சிறப்பிடம் அளிக்கப் பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உள்ள 3 நடராஜ விக்கிரகங்களும் பெரிய அளவில் அமைந்திருக்கின்றன. 3ஆம் பிராகாரத்தின் வட.மேற்கு மூலையில் ராமலிங்கப் பிரதிஷ்டை சுதை வடிவத்தில் காணப்படுகிறது, அந்த காட்சியைக் காணவிரும்புபவர்கள் நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும். ராமலிங்கேச்வரரை ஸ்ரீராமனும், சீதையும் பூஜை செய்து கொண்டிருக்கிறார்கள். லட்சுமணர், விச்வாமித்திரர், வசிஷ்டர், தும்புரு, நாரதர், நளன், அங்கதன், ஜாம்பவான், நீலன், சுக்ரீவன், விபீஷணன், ஆஞ்சநேயர் முதலியோர் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு கோயிலை தரிசனம் செய்து மறுபடி வரும் முன் வெளியில் சில தரிசனங்களை காணலாம்.

ஸ்ரீராமநாத சுவாமி ஆலயத்திற்கு மேற்கே சாலைக்குத் தென்புறம் லட்சுமண தீர்த்தம் உள்ளது. நீராழி மண்டபத்துடன் கூடிய திருக்குளம். பளிங்கு போன்ற நீர். இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கரையிலுள்ள சிவலிங்கத்தை வழிபட வேண்டும். இத்தீர்த்தத்திற்கு கிழக்கே இருப்பது ஸ்ரீராம தீர்த்தம் இதில் நீராடிவிட்டு எதிரில் உள்ள ஸ்ரீராம கோயிலை வணங்க வேண்டும். மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகங்கள் அனைத்தும் அற்புதமாய் இருக்கின்றன.

ஆலயத்திற்கு வடமேற்கே 3 கி.மீ தொலைவில் 'கந்தமாதன பர்வதம்' என்ற கோபுரத்துடன் கூடிய ஒரு மண்டபம் உள்ளது. அது ஒரு மணற்குன்றின் மீது அமைந்துள்ளது. படிகளேறிச் செல்ல வேண்டும். அங்கு செல்லும் வழியில், சாலையோரத்தில் எழுந்தருளியிருக்கும் ஒரு செந்தூர ஆஞ்சநேயரைத் தரிசிக்கலாம். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருப்பாதம் பட்ட புனித இடமாக இது போற்றப்பட்டு வருகிறது. எனவே தற்போது அங்கு அவரது திருவடிகள் கல்லில் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீராமநாத சுவாமி ஆலயத்திலிருந்து தெற்கே தனுஷ்கோடி செல்லும் பாதையில் 3 கி.மீ நடராஜபுரம் என்ற சிற்றூர் உள்ளது. அங்கு கோயில் கொண்டிருக்கும் **நம்புநாயகி** அம்மன், சக்திமிக்கவள். கோயிலுக்குப் பின்னால் 'சர்வரோக நிவாரணி' என்ற தீர்த்தம் இருக்கிறது. ராமேச்வரத் தீவிற்குத் தென்புறக் காவல் தெய்வமாக எழுந்தருளியிருக்கிறாள். வடக்கே பத்திரகாளி, கிழக்கே உஜ்ஜயினிகாளி, அக்கினி தீர்த்தக் கரையில், ஸ்ரீஆதிசங்கரர் மண்டபத்தருகில், ஸ்ரீராமநாத சுவாமி ராஜகோபுரத்தை நோக்கியவாறு ஒரு சிறு விநாயகர், ஆலயம் உள்ளது. அதற்குப் பக்கத்தில், ஒரு காளி கோயில் இருக்கிறது. அந்த அம்மனை 'உஜ்ஜயினி காளி' என்று அழைக்கிறார்கள். மேற்கே துர்க்கையம்மன் முதலியோர் காவல் காத்து வருகின்றனர்.

பாம்பனிலிருந்து ராமேச்வரம் வரும் பாதையில் ராமேச்வரத்திலிருந்து 5 மைலில் ஸ்ரீஏகாந்த ராமர் கோயில். தங்கச்சி மடம் என்ற ரயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையமும் இருக்கிறது. கோயிலுக்கு 3 பர்லாங் தூரத்தில் தண்ணீர் ஊற்று என்ற கிராமம் கடற்கரை அருகாமையில் உள்ளது அங்கிருந்து ½ பர்லாங்கு தூரத்தில் கடலில் சிறு கிணறு உள்ளது. அக்கிணற்றிலிருந்து நீர் குபு குபு என்று வரும் காட்சி அற்புதமாக உள்ளது. அதன் நீர் சுவையானதாக இருப்பது அதிசயிக்கத் தக்கதாகும். இதுவே 'வில் ஊன்றி தீர்த்தம்' ஆகும்.

கோடை காலத்தில் நீர் வற்றும்போது அக்கிணறு கண்ணுக்குத் தெரியும். இப்பகுதி "வில் வண்டி" என அழைக்கப்படுகிறது. இதற்கு மேற்கே தங்கச்சி மடத்திற்கு வடக்கே ½ மைலில் 'சீதா குண்ட தீர்த்தம்' இருக்கிறது. இத் தீர்த்தத்தில் நீராடிய பின் தங்கச்சி மடத்திற்கு கிழக்கே சாலைக்குத் தென்புறத்திலிருக்கும் மங்களத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்ரீ ஏகாந்த ராமர் கோயிலுக்கு வடக்கே ரண விமோசன தீர்த்தமும், உட்புறம் அமிர்தவாபி தீர்த்தமும் இருக்கின்றன. ஸ்ரீ ஏகாநத ராமர் கோயிலிலிருந்து இராமேச்வரம் வரும் பாதையில், ஊரின் எல்லையில் காட்டுப் பிள்ளையார் கோயில் இருக்கிறது.

<u>தனுஷ்கோடி</u>:- இது கோயிலிலிருந்து தென்கிழக்கே 11 மைல் தொலைவில் உள்ளது. 1964-ம் ஆண்டு வீசிய பெரும்புயலின் போது தனுஷ்கோடிக்குச் செல்லும் ரயில் பாதை அழிந்து போய் விட்டதால், 'வானி'ல் அல்லது 'ஜீப்'பில் செல்ல வேண்டும். தனுஷ்கோடிக்குச் செல்லும் வழியில் 5 மைலில் ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயிலை தரிசிக்கலாம்.

இராமேச்வரம் தீவின் தென்கிழக்குப் பகுதி ஒரு நீண்ட வால்போல் முடிகிறது. அந்த முனையைத் தான் தனுஷ்கோடி என்கிறார்கள். விபீஷணனின் வேண்டுகோளின் பேரில், ஸ்ரீராமர் தமது வில்லின் முனையால் தாம் கட்டிய பாலத்தை (சேதுவை) அந்த இடத்தில் உடைத்து விட்டாராம். 'தனுஷ்கோடி' என்றால் வில்லின் முனை என்று பெயர். இங்கு சமுத்திரத்தில் ஸ்நானம் செய்வதைத்தான் சேது ஸ்நானம் என்று குறிப்பிடுகிறார்கள். ரத்னாகரம், மஹோததி என்ற இரு கடல்கள் தனுஷ்கோடியில் ஒன்று சேருகின்றன. இங்கு முறைப்படி 36 ஸ்நானம் செய்வது மரபு

ஆழ்கடலில் இப்பக்கமாக ஓடும் ஒரு புனித நீரோட்டம் காரணமாக, ஜீவ அணுக்களும் சத்துப் பொருட்களும் சேதுக் கரையோரமாக ஒதுக்கப்பட்டு அங்கு தேங்கி விடுவதாகவும், சூரிய ஒளிபட்டதும் அவை நசித்து விடுவதாகவும் ஒரு கருத்து நிலவி வருகிறது. அதிகாலை 4 மணி முதல் 5 மணிக்குள் நீராடுவது நலம் பயப்பதாகும் என்று கூறுவதன் பொருள் இதுதானாம். இந்த சமுத்திர ஸ்நானம் சேது யாத்திரையின் மிக மிக முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. சேது புராணத்தை எழுதிய நிரம்ப அழகிய தேசிகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீடு தனுஷ்கோடியினை நினைத்தாலும் புகழ்ந்தாலும், நேர் கண்டாலும் வீடுபெறல் எளிதாகும்" என்று இதன் பெருமையினை விளக்கியுள்ளார்.

இராமேச்வரம்:- சந்திர வம்சத்தில் பிறந்த புண்ணியநிதி என்ற பேரரசன், ஸ்ரீராமநாத சுவாமியிடம் அளவுகடந்த பக்தி கொண்டிருந்தான். ஒரு சமயம் மகாவிஷ்ணுவை மகிழ்வித்து அவரது அருளை பெறும் பொருட்டு ஒரு வேள்வியைச் செய்தான். வேள்வியின் இறுதியில் புனித ஸ்நானம் செய்வதற்காக மனைவியோடு தனுஷ்கோடிக்குச் சென்றான் அங்கு நீராடி தானங்கள் செய்து விட்டுத் திரும்பும் போது, கடற்கரையில் அழகிய 8 வயதுச் சிறுமியைக் கண்டான்.

அவளது பேரெழிலில் சொக்கிப் போன மன்னன் "குழந்தாய், நீ யார்? இங்கு வரக் காரணம் என்ன?" என்று உள்ளன்போடு வினவினான். சிறுமி "அரசே! நான் ஓர் அனாதை, என்னை உன் மகளாய் ஏற்று வளர்த்து வருவாயா?" என்று கேட்க இங்கு வந்தேன். ஆனால் ஒரு நிபந்தனை, எவருடைய கரமாவது என்னைத் தீண்டினால் நீ அவரைத் தண்டிக்கத் தயாராயிருக்க வேண்டும், சம்மதமா?" என்று கேட்டாள். மன்னனும் அதற்கு சம்மதித்து சிறுமியை மகாராணியிடம் ஒப்படைத்தான்.

ஒரு நாள் அப்பெண் பூப்பறித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த ஓர் அந்தணர் ஆசை மேலிட அவளது கரத்தைப் பற்றினார். அப்பெண் பெருங்கூச்சல் எழுப்பினாள். கூச்சலைக் கேட்டு ஓடி வந்தான் அரசன், "என்ன நடந்தது?" என்று கேட்டான். பெண்ணும் "அந்தணன் என் கரத்தை பற்றி இழுத்தான்", என்றாள். இதைக் கேட்டு கோபம் கொண்டு அந்தணரை ராமநாத சுவாமி ஆலயத்தில் ஒரு மண்டபத்தில் சங்கிலியால் பிணைத்து சிறைப் படுத்தினான்.

சிறைப்படுத்திய அந்தணர் மகாவிஷ்ணுவாக அவரது கனவில் காட்சி தந்தார். கனவு கலைந்து எழுந்த மன்னன் திருமாலும், திருமகளும் தன் பக்தியைச் சோதிப்பதற்காகப் புரிந்த திருவிளையாடல் என்பதை உணர்ந்து அந்தப்புரத்திற்கு சென்றான். அங்கு மகள் திருமகளாக அமர்ந்து இருப்பதை கண்டான். அன்னையின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். அந்தணரை மாதவனாக தரிசித்து தான் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினான். பரந்தாமன் புன்னகை புரிந்தார். "அரசனே, நீ குற்றம் புரியவில்லை உண்மையான பக்திக்கு கட்டுப்படுவேன் என்பதை உலகுக்குக் காட்டவே உன்னால் கட்டுப்பட்டவன் போல் என்னை ஆக்கிக் கொண்டேன். உனக்கு அருளும் பொருட்டு இந்த வடிவங்கள் எடுத்துக் கொண்டோம்" என்று மொழிந்தார். மன்னன் இருவரையும் தோத்திரம் செய்து வணங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னவ! நீ என்னை சங்கிலியால் பிணைத்த கோலத்திலேயே, சேதுமாதவன் என்ற பெயரோடு மகாலட்சுமியுடன் இங்கேயே தங்கிவிடப் போகிறேன். என்னைத் தரிசிப்பவர் எல்லா வரங்களும் பெறுவர்," என்றார்.

சேதுவில் ஸ்நானம் செய்த பின் ஸ்ரீ ராமநாத சுவாமி கோயில் வந்து அதன் மேற்புறம், இரண்டாம் பிராகாரத்தற்கும் மூன்றாம் பிராகாரத்திற்கும் இடையே உள்ள சேது மாதவ தீர்த்தம் என்ற பெரிய தெப்பக்குளத்தில் நீராடி விட்டு, அதன் வடபுறத்தில் இருக்கும் சேதுமாதவர் திருச் சந்நிதியில் வீற்றிருக்கும் சேதுமாதவரையும், மகாலட்சுமியையும் வழிபடுகிறவர்களுக்கு சேது ஸ்நான பலன் கிடைக்கிறது.

சலவைக் கல்லால் ஆன வெண்மையான வடிவம் அது. நெற்றியில் சாளக் கிராமம் துலங்குகிறது. கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. பல நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்து, ஏகாதசருத்ரர்கள், அஷ்டவசுக்கள், யட்சர், கந்தர்வர்கள் முதலானோர் வணங்கியபடி, அருகில் மகாலட்சுமி நிற்பது போல் அமைந்திருக்கும் திருவுருவச்சிலை சுயம்பு மூர்த்தி என்கிறார்கள்.

இறுதியாக மூன்றாவது பிராகாரத்தில் உள்ள **மேலைவாசல் விநாயகரை** வழிபட்டு செல்ல வேண்டும்.

<u>திருப்புல்லணை</u>:- இராமநாதபுரத்திற்கு தென்கிழக்கே 5 மைலில் தர்ப்ப சயனம் என்ற திருப்புல்லணைத் திருத்தலம் இருக்கிறது. அங்கிருந்து 2 மைலில் ஆதிசேதுக்கரை என்ற கடற்கரை அமைந்திருக்கிறது. கடற்கரைக்கு அருகில், ஓர் ஆஞ்சநேயர் மூர்த்தி ஆலயத்திற்கு அருகில் சேஷகிரிராயர் சத்திரம் உள்ளது. அங்குள்ள கிணற்றில் ஸ்நானம் செய்த பிறகே கடலில் நீராட வேண்டும் அதுதான் முறையாம்.

இலங்கையில் இருந்து திரும்பிய ஸ்ரீராமர், பிராட்டியாரிடம், புனிதமான இந்த அணையைத் தரிசிப்பவர்களுக்கு சகல பாவங்களும் அகன்று விடும். சேதுவை தரிசித்து, சேது ஸ்நானம் செய்துவிட்டு, திருப்புல்லாணி திருத்தலத்தில் ஒருவருக்கு அன்னதானம் செய்தால், கயையில் 1 லட்சம், காசியில் 2 லட்சம், பிரயாகையில் 7 லட்சம் பேர்களுக்கு அன்னமிடுவது- இம் மூன்றையும் காட்டிலும் அதிகமான புண்ணியத்தைப் பெறலாம் என்று எடுத்துரைத்தாராம்.

கடற்கரையிலிருந்து திரும்புகிறவர்கள் வழியில் உள்ள 'சின்னக் கோயில்' என்ற இடத்திலுள்ள ஸ்ரீநிவாசப் பெருமானை நிச்சயம் சேவிக்க வேண்டும். 'சுவேத மாதவன்' என்ற வெள்ளை நிறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாலான சேதுமாதவரின் வடிவம் கடலில் இருந்து எடுக்கப்பட்டது. பெருமாள் ராஜ லட்சணம் பொருந்தியவர் என்பதைக் குறிக்கும் வகையில் அவரது திருவடிகளில் உள்ள கட்டைவிரல் குட்டையாகவும் இதர விரல்கள் சற்று நீண்டும் உள்ளது. வெள்ளை நிற அகத்தியர் சிலையும் கடலில் இருந்தே கண்டு எடுக்கப் பட்டதாக கூறப்படுகிறது.

சேதுக்கரையிலிருந்து வடக்கே 2½ மைல் தொலைவில் திருப்புல்லாணி ஆதி ஜகந்நாதர் ஆலயம் உள்ளது. 72 சதுர்யுகங்களுக்கு முன் தோன்றிய தலம். இங்கு உள்ள 'ஹம்ச தீர்த்தம்' நீரில் ஏற்படும் மாற்றத்தில் இருந்து நன்மை, தீமைகளை அறியலாம். இக் குளத்தின் மண்ணிலும் நீரிலும் அதிசய இரசாயனப் பொருள் கலந்திருப்பதாக கூறுவர்.

2ஆம் சுற்றின் மேல் பிராகாரத்தில் பத்மாசினித் தாயார் சந்நிதியை யடுத்துள்ள இத் தலத்தின் தலவிருட்சமான அரசமரம் அசுவத்த நாராயணரின் அவதாரமாகவே கருதப்படுகிறது. இது பல யுகங்கள் கண்ட பழம் பெரும் மரமாகும். ஆலமரம் போல் அங்கங்கே விழுதுகள் விட்டு, வேரூன்றி அது தழைத்து வருகிறது. ஒரே மரத்திலிருந்து புதிய புதிய மரங்கள் தோன்றியவண்ணம் உள்ளன. இதன் கிளைகள் முறுக்கிக் கொள்கின்றன. எங்கும் காணாத அதிசயம்.. பக்கத்தில் வேம்பு உள்ளது. இதன் இலையும் சிறுத்து. காம்பு நீண்டு, அதன் நுனி கூர்மையாகவும் உள்ளது. அரச மரத்தின் காய்ந்த பட்டையையும், அதன் அடியில் உள்ள மண்ணையும் எடுத்து ஹம்ச தீர்த்தத்தில் நனைத்து, இரண்டையும் சேர்த்து அரைத்து, நெற்றியில் திருமண்போல இட்டுக் கொண்டு மிகுதியைக் குளத்தில் கரைத்து அந்த நீரை எடுத்துப் பருகிய பின்னர், இந்த அரச மரத்தை வலம் வந்து வணங்கினால் ஞானம் பெற்று உயர்நிலை எய்தலாம்.

உத்தர கோசமங்கை:- இராமநாதபுரத்திற்குத் தென்மேற்கே 10 மைலில் இத்தலம் உள்ளது. திருப்புல்லாணியிலிருந்து மேற்கே 7 மைல், சிறு புகைவண்டி நிலையம் ஒன்றுள்ளது. அங்கிருந்து நேர் தெற்கே 4 மைலில் ஆலயம் உள்ளது.

சிவபெருமான், மங்கைக்கு (பார்வதி தேவிக்கு) வேதாகமங்களின் ரகசியங்களை உபதேசம் செய்ததால் இத் திருத்தலத்துக்கு உத்தர கோசமங்கை என்று பெயர் ஏற்பட்டது. உத்தரம் என்றால் உபதேசம், கோசம் என்றால் ரகசியம். இது மிகப்பழமையான சிவத்தலம். "மண் முந்தியோ மங்கை முந்தியோ?" என்ற மூதுரை தோன்றியது இத்தலத்தை குறித்துத் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உறையும் சுவாமி ஸ்ரீ மங்களநாதர். அம்பிகையின் திருநாமம் மங்களநாயகி. ஸ்ரீ மங்களநாத சுவாமிக்கு பீடமில்லை, அம்பாள் பத்ம பீடத்தில் எழுந்தருளி ஜபமாலை, புஷ்பம், அபயவரத ஹஸ்தங்களுடன் அருள்பாலிக்கிறாள்.


வடக்கு பிராகாரத்தில் நடராஜரின் தனிக் கோயில் இருப்பது இத்தலத்தின் சிறப்பு அம்சங்களில் முக்கியமானதாகும். வேறெங்கும் காணமுடியாத ஆறடி உயரத்தில் மரகத நடராஜர் இங்கு இருக்கிறார். ஆனால் ஆண்டு முழுவதும் அவர் சந்தனக் காப்பு அலங்காரத்தில் தான் காணப்படுவார். அவருக்கு ஆண்டுக்கு ஒரு முறை, ஆருத்ரா தரிசனத்தின் போதுதான் அபிஷேகம் நடைபெறுகிறது. அபிஷேகம் நடைபெறும் 4 மணி நேரம் மட்டுமே அவரை மரகத வடிவத்தில், பச்சை வண்ணத்தில் தரிசிக்கலாம். மரகத நடராஜர் எழுந்தருளியிருக்கும் கோயில் மண்டபத்தில் ஒரு நடராஜ உற்சவமூர்த்தி இருக்கிறது. அதற்கு வருடத்தில் 5 அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. ஆலயத்தினுள்ளேயே அதன் புறப்பாடு ஆகிறது. அந்தப் பிராகாரத்தில் மங்கைப் பெருமாள் என்ற ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசிக்கிறோம்.

சிவன் முனிவருக்கு ஜோதியாக காட்சி தந்த அக்கினித் தீர்த்தம் ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது. கரையில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு ஒரு கோயில் இருக்கிறது. அதற்கு சற்றுத் தெற்கில், சகஸ்ரலிங்கேச்வரர் திருச் சந்நிதி இருக்கிறது. அங்குதான் தல விருட்சமான இலந்தை மரம் இருக்கிறது. அது மிகப் பழமையான மரம் அடிப்பாகம் பருத்து, பார்ப்பதற்கு யானை ஒன்று உட்கார்ந்து இருப்பது போல் காட்சியளிக்கிறது. சேது யாத்திரையின் முடிவாகத்தான் இத்தலத்தை தரிசிக்க வேண்டும்.

இத் திருத்தலங்கள்:- 'ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும் கணநாதம்ச மகேச்வரம்' என்ற பஞ்சாயதன பூஜையின் தத்துவப்படியும் அமைந்துள்ளது. **ஆதித்யம்** என்ற சூரிய வழிபாடு நவபாஷாணம் தேவிபட்டினத்திலும், **அம்பிகை** வழிபாடு மலைவளர் காதலியமர் இராமேச்வரத்திலும், **விஷ்ணு** பூஜை தர்ப்பசயனம் திருப்புல்லணையிலும், (திருப்புல்லாணி) **காணாபத்யம்** என்ற கணபதி வழிபாடு உப்பூர் விநாயகப் பெருமானிடத்திலும், **மகேச்வர** பூஜை திருவுத்தரகோசமங்கை நடராஜமூர்த்தியிடத்திலும் அமைவதாகவும், சேது யாத்திரை செய்தால் நம்மையறியாமல் பெரிய அளவில் ஒரு பஞ்சாயதன பூஜை செய்த பலன்களைப் பெற்று விடுவதாகவும் திருவாடானை ஐயாமணி சிவம் எடுத்துக் காட்டியுள்ளார்.

தொகுப்பு:- திருமதி விமலா மணிவாசகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆதாரம்:- பரணீதரனின் காசி ராமேச்வரம் யாத்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒன்றுகூடல் நிகழ்வில்....."

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் ஒன்றுகூடல் நிகழ்வு 2000–11–18ஆம் திகதி சனிக்கிழமை கொள்ளுப்பிட்டியில் உள்ள சிறீ மாரீஸ் ஹோட்டலில் இராப் போசன விருந்துடன் நடைபெற்றது. அத்துடன் இந்த நிகழ்வில் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான யாழ் நாதமும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் மேற்படி கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையும் சங்கத்தின் போஷகரில் ஒருவருமாகிய திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள். சங்க அங்கத்தவர்கள் சிலரின் கணவன்மாரும் சமுகமளித்திருந்தனர்.

தலைவி செல்வி சற்சொருபவதி நாதன் பேசுகையில் இந்தச் சங்கத்தை 1993ஆம் ஆண்டு அமைப்பதற்குத் தூண்டுகோலாக இருந்த முன்னாள் ஆசிரியையும் சங்கத்தின் போஷகரில் ஒருவருமாகிய திருமதி புஷ்பா சுப்பிரமணியத்துக்கு நன்றி கூறினார். பிரதம அதிதியான திருமதி லீலா நாகரத்தினம் அவர்களையும், முன்னாள் ஆசிரியைகளையும், சங்க அங்கத்தவர்களையும், புதிதாக வருகை தந்துள்ள பழைய மாணவிகளையும் நலன் விரும்பிகளையும் அவர் அன்புடன் வரவேற்றார்.

சங்கம் வருடாவருடம் எமது பாடசாலைக்கு மிகவும் தேவையான பொருட்களை வேண்டி அனுப்பி வைத்துள்ளது என்பதையும் தெரிவித்தார். தமிழ் ஆங்கில அச்சுயந்திரங்கள், பிரதிசெய்யும் யந்திரம், நூல்கள், ஒலிபெருக்கிச் சாதனங்கள், கணனி, மேலிருந்து படம் காட்டும் கருவி (overhead projector) போன்ற பொருட்கள் இவற்றுள் அடங்கும். இவற்றை அனுப்புவதற்கு கலாநிதி வி அம்பலவாணர் அவர்கள் பெரும் உதவி புரிந்துள்ளார் என்று கூறி அவருக்குச் சங்கத்தின் சார்பிலும் கல்லூரியின் சார்பிலும் அவர் நன்றி கூறினார்.

பொருளாளராகவும் செயலாளராகவும் மாறி மாறிக் கடமை புரிந்து சங்கத்தை வளர்த்த திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களுக்கும், திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் பாராட்டுத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்முதலாக "யாழ் நாதம்" என்ற எமது சஞ்சிகை 1995ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களின் பெருமுயற்சியால் இந்தச் சஞ்சிகை வருடாவருடம் வெளிவருகின்றதென்றும் தலைவி தெரிவித்தார். இந்த நிகழ்வில் இதழ் 6 வெளியிடப்பட்டது. முதல் பிரதியை திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் பிரதம அதிதியான திருமதி லீலா நாகரத்தினம் அவர்களுக்குக் கையளித்தார். இரண்டாவது பிரதியை நூல் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் முன்னாள் ஆசிரியை திருமதி மகேஸ் பரமநாதன் அவர்களுக்குக் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய பிரதம அதிதி திருமதி நாகரத்தினம் அவர்கள் சங்கம் கல்லூரிக்கும் மாணவிகளுக்கும் ஆற்றிவரும் அருந்தொண்டைப் பாராட்டினார். ஒவ்வொரு வருடமும் ஏதாவது ஒரு அவசியமான உபகரணத்தைப் பாடசாலைக்கு அனுப்பி உதவுவது மிகவும் முக்கியமான ஒரு அலுவலாகும். இதற்கு நிதி சேகரிப்பதற்குப் பல அரிய நிகழ்ச்சிகளைச் சங்கம் நடாத்தியதையும் அவர் நினைவுகூர்ந்து பாராட்டுத் தெரிவித்தார். சங்கத்தைச் சிறப்பாக வழிநடத்திய தலைவி செல்வி சற்சொருபவதி நாதன் அவர்களையும் செயலாளர், பொருளாளர், மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களையும் அவர் பாராட்டி அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

இனிய விருந்துடன் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு நிறைவு பெற்றது.

வீரகேசரி: - வெள்ளிக்கிழமை 2000-12-15 திகதி பிரசுரமாகியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயூராபதி அம்மன்

ராகம் - ஹம்சத்வனி தாளம் - ஆதி

பல்லவி

மயூரா பதி வாழ் அம்பிகையே - காளி
மாதேவி மாநிலத்தைக் காப்பவளே
(மயூரா)

அனுபல்லவி

நீ தமு முனை நாமே நாடி வருவோம் - அம்மா
தினமும் உன் தரிசனம் தேடி வருவோம்
(மயூரா)

சரணம்

வல் வினை போக்கும் நல்லரசியே எங்கள்
பல் வினை நீங்க நீ கருணை செய்வாய் தாயே
எவ் வினை தேடி எம்மை வந்திடினும் நீ அதை
நல் வினை ஆக்கி எமை ஆதரிப்பாயே தாயே
(மயூரா)

ஆக்கம்
திருமதி திலகா விஜயரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப் தளத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரி –

## www.jhlc.lk

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் விடா முயற்சியின் பயனாக, யாழ் இந்து மகளிர் கல்லூரி அண்மையில் வெப்தளத்தில் வந்தது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் ஒரு பாரிய முன்னேற்றமாகும். உலகளாவிய ரீதியில், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் கல்லூரியின் பழைய மாணவிகளுக்கும் நலன் விரும்பிகளுக்கும், கல்லூரி தொடர்பான விடயங்களை அவ்வப்போது தெரியப்படுத்துவதற்கும், அவர்களின் கருத்துக்கள் உதவிகள் துரிதமாகப் பெற்று இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு மேலும் உதவுவதற்கும், வெப் தளம் ஒரு அடித்தளமாக விளங்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இக் கல்லூரி தொடங்கிய காலத்தில், யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் இந்து மாணவிகளுக்கென்று ஒரு கல்லூரி இல்லையே என்ற குறையை நிரப்பியது. அன்றிலிருந்து தொடர்ச்சியாகக் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், ஆகியோருடன் ஆர்வமுள்ள பெற்றோர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரும் இணைந்து ஆற்றிய பணிகளினால் கல்லூரி ஸ்தாபகர்களின் கனவை நனவாக்கி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் இந்து மாணவிகளுக்கு அளப்பரிய சேவை செய்யும் ஒரு தாபனமாக இப்போது வளர்ந்துள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமை காரணமாக கல்லூரி மாணவிகள், ஆசிரியைகள், அதிபர் ஆகியோர் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் கல்லூரியை நடத்தி வருகிறார்கள். எனவே பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் ஆகியோர், இந்த வெப் தளத்தை உரியமுறையில் பாவித்து, தமது கல்லூரிக்கு உதவி, கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

காலப்போக்கில், கல்லூரி அன்னையின் மக்களுடைய ஆலோசனைகள், வெப் தளத்தை மெருகூட்டி வளர்ப்பதற்கும், பல்லாயிரம் மைல்களினால் ஏற்பட்ட இடைவெளிகளை இந்த நவீன தொடர்பு வசதியினால் நிரப்புவதற்கும், உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

யா.இ.ம.க ப.மா.ச, கொழும்பு — 08.08.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் நாதம் இதழ் 6 வெளியீட்டின் போது நூல் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் முன்னாள் ஆசிரியை திருமதி மகேஸ் பரமநாதனுக்கு நூலின் பிரதியைக் கையளிக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம அதிதியும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி லீலா நாகரத்தினம் உரையாற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COVER PRINTED BY UNIE ARTS (PVT) LTD. COLOMBO -13. T.P.: 330195